[illegible]

Vl. No. 26 28 Jan. 1928

[illegible]

JL
[illegible]211, N28KN
N28·1·26.
189009.

*Reg. No. M. 2324.* தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0

புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—

*No. 11,* வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ளு ஜூன்மீ 28உ [No. 26.

20 NOV 1928

189009

பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 501 | 6. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A.,B. L. | 511 |
| 2. | காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L. | 503 | 7. | அகத்திய முனிவர் R. முத்தையர் | 513 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 505 | 8 | அரவிந்த கோஷ். கவி இரவீந்திரநாத தாகோர் | 515 |
| 4. | தமிழ்ப் பாடம் | 508 | 9. | பழமுதிர்சோலை 'சபரி' | 496 |
| 5. | மதிப்புரை—"ஷண்முகநாதன்" | 510 | 10. | வர்த்தமானம் | 499 |


## கலா நிலயம்.

### முப்பிழை.

எல்லாவற்றையும் தலைகீழாக நின்று நோக்கப் பழக்கி வருகின்றது, இக்காலம். நேர்முகமாகப் பார்ப்பாரும் காட்டுவாரும் அரியராயினர். இத் தலைகீழ் திரும்பிய பார்வையால் விளையும் விபரீதத் தோற்றங்கள், நிலை அளவு இடம் எனும் மூன்றுதன்மையில் மாந்தரது இலக்ஷியங்களைத் தடுமாறும்படி செய்கின்றன. நிலை யென்பது காரணகாரிய தொடர்பு. சிறிதுபெரி தென்று செவ்வனே தெளிந்து சிந்தையில் மதித்தல் அளவு. உள்ளத்திற்கியன்ற உயிரும் புறத்தேபகட்டும் உடையும் ஓர்ந்துணர்ந்தது இடம். தெருண்ட மேலவர் விஷயங்களை நேராக நோக்கிக் காமக்குரோதாதிகளால் கவிழ்க்காமல், நிலையும் அளவும் இடமும் இருப்பன இருக்குமாறே தெரிந்து கொண்டு ஏற்றன செய்வர். மாந்தராயினோர் பார்வையிலோ புத்திக்குமுன், ஆசையும் கோபமும் லோபமும் மோகமும் செருக்கும் பொறாமையும் புகுந்தலைவதால், நிலையும் அளவும் இடமும் தத்தம் நிசத் தன்மைக்கு மாறாக மயங்குகின்றன. இம் மயக்கத்தால், காரியம் காரணம் போலவும்; துரும்பு மலைபாகவும் மலை துரும்பாகவும்; மனதில் நிகழ வேண்டியதைப் புறத்திற்குரியதாகவும் புறத்தே போர்ப்பதை மனதில் நிகழ்வதாகவும் கருதப் பல் வேறு வகைகளில் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றிப் பரபரத்து விவகரிக்கின்ற பரிதாபத்திற்கு ஆளாகி இருக்கின்ற திவ்வுலகம்.

**சாதி பேதத்தால் நாங்கள் கெட்டோம் என்பவர், கெடுதி ஒன்று உளதெனின், ஒருகால் சாதிதான் தம்மால் கெட்டதோ எனச் சிறிது சிந்திப்பதும் அமையும். சாதிபேதத்தைப் பாராட்டுவது நலம் தீது என்னும் அச் சாஸ்திரவாதத்தில் நாம் இங்**குத் தலையிட நினைத்ததில்லை. சாதி சாதி என்ற வேற்றுமையாற் றானே தாம் சகல நலங்களையும் இழந்ததுமல்லாது அயலரசாட்சிக்கும் அடிமைகளாயினர் என்று ஏங்குவாருடன் ஏங்கவேனும்; மற்று, அச்சாதிப் பிரிவினாலன்றோ தாம் பல நலங்களையுடையராய் மணவாழ்க்கைத் தூயராய்ப் புத்தி நுட்ப முடையராய் விளங்குகின்றார் என்று முழங்குவாருடன் முழங்கவேனும் மனங் கொண்டிலம், அம்மட்டே. இழந்ததற்குக் காரணம்கிடக்க, இழந்ததே எதுவென்று தெரியாது அழுவாரோடழுகின்ற மாயம் ஏற்புடைத்தன்று. மனிதர் மனது பாழாகப் பாழாக நலங்குலைகின்றனர். குலையவே, துன்பமெய்தித் தெளிவற்றுப் பழியைக் கொண்டு போய் ஆட்சியின் தலையிலும் சாதியின் தலையிலும் இன்னும் இவைபோல் எளிதில் எட்டக்கூடியவற்றின் தலைகளிலும் சுமத்திச், சொல்லிற்கும் நாவிற்கும் ஒட்டாமல் வசைபயிலப் புகுவார் ஒரு சாரார். ஒருவர் ஒன்று சொன்னால் அதற்கு மாறாகப் பேசுவதே கருமமும் பெருமையும் என்ற கொள்கையை யுடைய மறுசாரார், தம்முறையே தம்பிரான் முறையாக இருந்தபோதிலும், மனதிற்கும் நாவிற்கும் ஒட்டாத சில சொற்களால் அவைகளைப் போற்றிப் போற்றி ஆரவாரம் செய்பவராகின்றனர். இவ் விருதிறத்தவர்க் கிடையே, இருக்கும் தீமைகளோ யாதும் இடையூறின்றி வளர்ந்து வருகின்றன. நலம் குறைந்து தீமை இவ்வாறு தம் கண்முன் வளர்வதைக் காணச் சகியாராகிய சீர்திருத்தத் தலைவர்கள், ஜோதிடன் சொன்னதை நம்பிப் புதையலுக்காகத் தரை தோண்டும் தரித்திரரைப்போல், வோட்டெடுக்கும்

பெட்டியை (ballot-box) முன்னிலும் பன்மடங்கு ஆர்வத்தோடு எல்லாச் செல்வமும் எடுத்தளிக்கு மாறு குடையத் தலைப்படுகின்றனர், சிலர். கையில் வருவது கந்தைக் காகிதமே. வேறு சிலர் தீமையைத் துரத்துமாறு, சாதி மத ஆசார சம்பந்தமான விஷயங்களின் தலையிலே, சமையல் கெட்டால் சட்டியை உடைப்பதுபோல், ஓங்கியோங்கி அடிப்பவராவர். பசியே எஞ்சும். துன்பத்திற்குக் காரணம் தீமை. இக்காலமிருக்கின்ற எவ்வகைத் தீமை சாதி வேற்றுமையால் ஏற்படுகின்றதென்று சற்றே சிந்தித்துச் சொல்லவல்லாரை அறிய எம்மனோர் பலர்விரும்புகின்றார். முதலிலே, நம் நாட்டில் சாதி வித்தியாசம் என்றவொரு வித்தியாசம் இருக்கிறதென்று சாதிப்பதே இயலாதென நினைக்கின்றோம். சிலரைப் பார்ப்பார் என்றும் மற்றவரை மற்றச்சாதியாரென்றும் அழைக்கின்ற பேரின் பேதமன்றிச் சாதியே இடைநின்று, அந்த அந்தச் சாதிக்குள்ளேயே நேர இயல்வதை, வேறுவேறு சாதிக்குள் இயலாவகை இடையூறியற்றி வைத்ததெதுவென நினைக்க நினைக்க எம் நினைவிற்கு எட்டவில்லையே. பிராமணருக்கும் அவரல்லாதாருக்கும், அவ்வல்லாதார்தம்முள் இருக்கும் மூன்று சாதியினர்க்கும், இடையே நிகழாதன மணப்பதும் உண்பதும் தவிர வேறெவை? இவையிரண்டும் நேர்வதால் யாதுநலம் யாது தீமை; நேராததால் யாது நலம் யாது தீது? இதற்கு மறுமொழி முன்பின் யோசியாது விரைந்தும் இரைந்தும் பேசுவதிற் பயனில்லை. இதனால் இன்னநலம் இன்ன தீமை உளதென்று உரைப்பதன்முன், நாம் கருதும்படி சாதி பேதமில்லாத பிறநாடுகளில் அந்நலமுந் தீமையுமில்லையோ வென்பதைத் தேர்ந்துகொண்ட பிறகே வாயெடுக்க வழியுண்டு.

நலமுந் தீமையு மொருபுறமிருக்க, மணப்பதும் உண்பதும் நிகழாததால் சாதிக்குள் வேற்றுமையேனும் அதனால் ஏற்படுகின்றதா வென்று பார்ப்பினும், இல்லை யெனும் முடிவே எய்துவோம். இவை வழக்கங்களேயன்றி மாறுபடு வேற்றுமைகளல்ல. வேற்றுமையென்று அவைகளை அழைப்பினுங்கூடச் சாதிவேற்றுமை என்று நாம் எண்ணல் பொருந்தாது. ஓரே சாதிக்குள்தான் யாரையும் யாரும் மணக்கின்றனரோ, யாரோடும் உண்கின்றனரோ! பணமுடையவன் ஏழையை மணப்பதில்லை. வேலைக்காரனும் எஜமானனும் ஓரேசாதியாயினும் சேர்ந்து சாப்பிட்டுப் பார்ப்ப தருமை ஒரு குடும்பத்தினர் கூட சில இடங்களில் ஒருவர் தொட்டு மற்றவர் உண்பதில்லையே. தாமே சமைத்தல்லாமல் உண்பதில்லை என்னும் நியதி சிலர் கொண்டுளர். இங்குச் சாதிவேற்றுமை இல்லாவிடத்தும் இவைகள் ஏன் நிகழ்கின்றன? என்ன குற்றம்?

உள்ளுற இவைகளை உணர்ந்தவர், உண்பதும் மணப்பதும் வேற்றுமை அல்லவெனினும் அவ்வழக்கங்கள், வேறுவேறு சாதி என்ற பேர் நிலைப்பதற்கு ஆதாரமாயிருப்பதால் அவ்வழக்கங்கள் ஒழிந்து யாவரும் ஒன்றாய்க் கலக்கவேண்டியது அவசியமென்பர். யாவரும் ஒன்றாய்க் கலக்கவேண்டுமென்பதை நாமும் எம்மாலியன்ற ஆர்வத்தோடு ஒப்புக்கொள்கின்றோம். இவ்வழக்கங்களே பிரித்துவைக்கின்றன என்பதுதான் சந்தேகத்திற்கிடமாயிருக்கின்றது. வேறு வேறு சாதியென்னும்பேர் இருப்பதால் ஒரு நலமும் இருப்பதாக நாம் எண்ணாதது போலவே, எத்தீங்கும் இருப்பதாகவும் எண்ணிலம். சாதிநினைவில் தீங்குளதென்பவர் காட்டக்கூடிய தீமைகள் இரண்டுள. ஒன்று, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற சாதிச்செருக்கு; இரண்டாவது, மற்றச் சாதியாரை நீக்கித் தன்சாதியாருக்கே அதிகார ஸ்தானத்தில் இருப்பவர் உத்தியோகம் கொடுக்கச் செய்கின்ற சுயசாதி அபிமானம், என்பது.

எல்லாச் சுய அபிமானங்களையும் போலவே சுயசாதி அபிமானமும் தீமையே என்பதற் கையமில்லை. ஆனால் சுயசாதி அபிமானம் என்ற வோர் மனப்பான்மை யாருக்கும் இருக்கக்கூடும் என்று எண்ணவேண்டா. காரியார்த்தமாய்ப் பிறரைக் கொடுமை கூறுவதற்காக இந்தப் பேரை உபயோகப் படுத்தலாம். "அந்தச் சாதியார், சாதிக் கட்டுப்பாடு மிகவும் உடைய கொடியவர். அவர் நம்மைத் தலையெடுக்கவொட்டார். கிடைக்கக்கூடிய இலாபமெல்லாம் சுற்றிச்சுற்றித்தமக்குள்ளேயே பகிர்ந்துகொள்வர். நண்பர்களே, இக்கொடுமைக்கு நாம் இத்தனை காலமாக ஆளாயிருந்த பரிதாபத்தை யாரிடத்தில் சொல்லி ஆறுவோம். ஆனாலோ, இப்பொழுது நமக்குக் கண்திறந்தது. இந்தச் சாதிக்கட்டுப்பாடு பொல்லாதது" என்று கடிந்துபேசுவார் வார்த்தைகளை உற்றுக் கேட்டுக்கொண்டுவந்தால், அடுத்த மூச்சில் அவர்கள், "ஆகையால், நண்பர்களே, நீங்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து கட்டுப்பாடு உடையவர்களாக வேண்டும். நம்முடைய சாதியில் அபிமானம் மேன்மேலும் வளரும்படி செய்து கொள்ளுங்கள். செய்துகொண்டு என் சாதிச் சகோதரர்களே, உங்கள் நன்மைக்காக இந்தத் தேர்தலில் எனக்கே 'வோட்டை'க் கொடுங்கள்" என்று சொல்லி முடிப்பதில் முரணுமுண்டு என்பது தெளிவாகும்.

ஆதலால், சுயநயத்தால் அவனவன் தனித்தனி, தன் காரியத்தைத் தேடிக்கொள்கின்றான் என்பதறியாமல், அவன் ஒரு சாதியைச் சேர்ந்திருப்பதால், அச்சாதி அபிமானத்தால் விவகரிக்கின்றான் என்று எண்ணுவது தவறு. மெய்யன்பும் நற்குணமும் உடைய தயாளசீலர் தம்சாதி பிறசாதி தங்குடி பிறகுடி என்று பாராமல் செய்வதற்குள நலங்களை எங்கும் செய்வர். அஃதில்லார்க்குச் சாதி அபிமானம் என்பதும் சுயநலம் சாதிப்பதற் கிருக்கின்ற பல சாதனங்களுள் ஒன்று. ஒன்றில்லாமற் போனால் மற்றொன்று அவர்களது உபயோகத்திற்குக் கிடைக்கும்.

சாதிச் செருக்கு என்று எண்ணுவதும் தவறு. ஒருவன் செருக்குடைய மனத்தவனாயின் சாதியை முன்வைத்துச் சில சமயங்களில் செருக்கலாம். பணத்தாலும் படித்தேனென்ற பேரினாலும் செருக்குவாரை என் சொல்வது. பணம் இருந்தால் செருக்கியே ஒருவன் தீருவானென்றும், படிப்பிருந்தால் ஒருவன் செருக்கியே தீர்வானென்றும், பணத்தையும், படிப்பையும் கொண்டுபோய்க் கடலில் போடும்படி சொல்வார், இரண்டொரு மதியிலாப் பேதைகள் தவிர, இலரே. சாதியின் செய்தியும் அத்தகையது. தாமத குண முடையவர் எதையும் முன்னிட்டு இறுமாப்பு அடைவர். அது சாதியின் குற்றமன்று; அவ்வந்த மனிதனின் தனிக் குற்றம்.

முதற்சொல்லிய தலைகீழ் நோக்கினால் இந்தத் தவறுகள் விளைகின்றன. மனிதர் தாமதகுணம் மிகுந்து கெடக் கெட, அவர்கள் சாதியையும் மதத்தையும் சட்டங்களையும் மற்றுள யாவற்றையும் கெடுத்துவிடுவதே உண்மை யென்று ஓராது, சாதி மதம் முதலியன அவர்களைக் கெடுத்து விடுவதாக விவகரிப்பதால் விளையும் பொல்லாங்கு சிறிதல. இது நிலையைப்பற்றிய பிழை. ஆன்ம சுத்தியைத் தரும்பாகவும் ஆசாரத்தை மலையாகவும் மதிப்பது அளவு பிறழ்ந்த பிழை. எச்சாதியார்க்கும் மனம் என்பது ஒன்றே என்றறியாமல் வெளி யொழுக்கங்களே வாழ்க்கை எனப் பேசுவது இடப்பிழை.

மனதின் மாசுதீர்ந்து அதனை அன்புக்களஞ்சியம் ஆக்குதற்கு ஏற்ற நெறி கடைபிடிப்பார் யாவரோ அவர் தெளிந்த காட்சியர். கொண்டாடுதற்குரியவர்.



# காந்திமதி என்னும் காந்தாரநாட்டுக் கட்டழகி.

(485-வது பக்கத் தொடர்ச்சி)

## 23. ஸூக்தமும் பாஷ்யமும்.

பல்வேறு தொழில்களில் பொருள் தேடுவாரைப் போன்றே வைத்தியன் தாமோதரனும் விஷம்விற்ற காசு சாகாது என்னும் கொள்கையன். அவன் பூசனை புரிந்த கடவுளெல்லாம் காசு ஒன்றே ஆகையால் அவனது உள்ளத்தில் குடி கொண்டிருந்ததும் புறத்தே பயின்றதும் இரண்டும் விஷமே. அவன் கையாடுவதும் விஷம், நெஞ்சில் நினைப்பதும் விஷம். அதற்கேற்ப அவன் தேடும் பொருளோ ஆள்கொல்லி — அவன் தொழிலும் அஃதே.

இத்தகைய பணபக்தன், பழிக்கடன் தீர்க்கப்பதறும் நரபாலபிரபுவிற்கு நன் மந்திரியாயிருக்க, இத்தீமை ஆன்வோர் ஆட்சியில் எக்கொடுமை தான் நடைபெறாது? அரசக் கொலைக்குக் கங்கணம் கட்டிய விராடபத்ரன் இருக்கின்றான். அக்கன்மனக் கயவனின் மண்ணாசை நம் மருத்துவனின் பொன்னாசைக்குக் குறைந்ததன்று. ஆகையால் கூலிக்குக் கொலைபுரியக் காத்திருக்கும் தாமோதரனைக்கொண்டு சித்ராங்கனின் உயிரைவாங்க விராடபத்ரன் திட்டம் செய்தனான். நரபாலன் இச்சதி செய்யத் தன்னொரு கையைத் தருவதின் நாட்டம் மண்ணுமன்று, பொன்னுமன்று. சித்ராங்கன் தன்னைக் கைவிதிர்த்து அவமானம் செய்து விட்டானென்றும், அதனால் தன் 'சுயமரியாதை' அழிந்ததென்றும், அப்பழியைத் தீர்க்க வேண்டுமென்றும் என்னவோ ஒரு எண்ணம் உருவில்லாமல் அவன் மனதுள் புகைந்துகொண் டிருந்தது. அதுவும் இரதி பௌர்ணிமியில் கையிழந்தபோது தாமோதரன் ஓதிவைத்த உபதேசமே. நரபாலன் துஷ்டனும் ஆவான், மடயனுமாவான். ஆனால் அவனிடத்தில் துஷ்டத்தனத்தைவிட மடத்தனமே அதிகம். இவ்வுலகில் துஷ்டரும் இருக்கின்றனர், மடயரும் இருக்கின்றனர். இவ்விரு வகுப்பினோர்க்கும் ஒருநாளன்றி யொருநாள் தீங்கு வருவது திண்ணம். ஆனால் முதலில் வருவது மடயனுக்கேதான். நரபாலன் துவக்கத்திலேயே கையொடியக் கண்டது இதற்குக் கரியாம். ஏழைத் தனஞ்சயன் உயிர்துறக்க நேர்ந்ததுவும் நினைவிற்கு வரலாம்.

இன்னுமொன்று: துஷ்டர்கள் மதியீனரைப் பெரிதும் என்னுவர். மடயர்களை அடுத்து, இல்லாத வேலையெல்லாம் உண்டாக்கி அதற்குப்பிறகு கூலியும் பெறலாம் என்பது எந்நாளும் துஷ்டர்களின் சூழ்ச்சிகளுள் ஒன்று. ஆகையாற்றான் சித்ராங்கனைக் கொல்வதெனும் எண்ணத்தைத் தாமோதரன் நரபாலனிற்கு உண்டாக்கி வைத்தான். ஆனால், இப்பொழுது அக்காரியத்திற்கு இன்னொரு துஷ்டன் விராடபத்ரன் வந்திடையே முளைத்தது முதலில் தாமோதரனுக்குச் சிறிது சங்கைக்கிடமாகவே இருந்தது. காரியம் முடிந்தபிறகு பேசிய பணத்தைக் கொடுக்க மனம் வாராமல் அப்பாதகன் தன்னையும் கொன்றுவிட நேருமோ வென்றஞ்சினான். மகோதரனைக்கொண்டு முன் ஒரு கொலைசெய்வித்துப் பிறகு அவன் உயிருடன் இருப்பதின் குணதோஷங்களைப் பற்றித் தானே ஆராயவேண்டி வந்த நிலையும், அப்பால், காலநாதனின் காலின்கீழ்க் கிடந்த அக்காதகன், வாய்திறந்து உண்மையைப் பிதற்றுவானானால் தன் கையாலேயே விஷத்தைவைக்க மிக்க கவனத்துடன் அருகில் தான் அந்நாள் நின்றிருந்த நினைவும், தாமோதரனிற்கு இன்று தன்பொருட்டுத் தெரியத் தோன்றுவது இயற்கையே. ஆத்ம ஆராய்ச்சியே அனேகவித சந்தேகங்களுக்குக் காரணமாகின்றது. மற்றுத் தெளிவிப்பதும் அதுவே. ஆனால் நம் தாமோதரனின் தன்மையிலோ பயத்தினும் பேராசையே முன்னெழுந்து நின்றது. இப்பாதகச் செய்கைக்கு ஊதியம் விராடபத்ரனிடமிருந்தே அதிகம் கிடைக்கக் கூடுமென மதித்து, அன்னான் கணக்கிலேயே சித்ராங்கனைக் கொல்வதெனத் துணிந்தான் தாமோதரன்.

கொல்வதற்கன்றிச் சித்ராங்கனை எவ்விதத்திலும் எய்துதற் கியலாதென்று எண்ணியிருந்த தாமோதரனுக்குத் தன்னை இளவரசன் மறுபடி ஆள்விட்டழைப்பதை நரபாலன் சொன்னவுடனே, வைத்தியனின் மனம், அவன் வைக்கும் விஷமேபோல், வெகுவேகமாய் வேலை செய்யத் தலைப்பட்டது. "சாத்தனுக்காகக் கொற்றனைக் கொன்றாலென்ன, மற்றுக் கொற்றனுக்காகச் சாத்தனைக் கொன்றாலென்ன — கொலையின் கூலி மாத்திரம் எனக்குக் கிடைப்பதாயின். இளவரசனோ சிற்றப்பனால் தான் அடைந்துள நிலைமையும் தனக்குற்ற இடுக்கண்களையும் நன்கு அறிந்துளான். ஆகையால், 'விராடபத்ரனைக் கொன்று உனது இடுக்கண் தீர்க்கின்றேன்' என்று சித்ராங்கனிடம் மெல்லச் சொல்லி அவன் நெஞ்சைத் தடவிப்பார்த்தாலோ! உடன்பட்டுவிடுவானானால், பிரதிபலன் பிழையாது, பிறகு எனக்கு ஆபத்துமில்லை" என்றிவ்வகை எண்ணினவனாய்த் தான் முன், "விராடபத்ரனுடன் செய்துள உடன்படிக்கை நிலைக்குமோ மாறுமோ என்று தாமோதரன் நரபலனை, பிரதாபதீரரின் மாளிகைக்குப் புறப்படுமுன் கேட்டனன்.

இழுதை ஒருவன் எந்தக் காரியத்தில் தலையிட்டுக் கொண்டாலும் அவன் நோக்கம் சிறிதும் தெளிவின்றி உழக்குவார் உழக்கும்வண்ணம் குழைவதியல்பு. அதனினும், மடயன் துஷ்டச் செய்கையில் சேர்வானானால் கலக்கமோ பின்னும் ஒருபடி அதிகமாயிருக்கும். 'சதிக் கொலை சதிக்கொலை'யென்று விராடபத்ரன் ஒருகாதிலும் வைத்தியன் ஒருகாதிலும் இடைவிடாது ஊதிக்கொண்டிருந்ததை நரபாலன் அறிந்தானேயல்லாது, யாரை யார் எதற்காகக் கொன்றுதீர வேண்டுமென்று அவன் புத்தியால் தெளிவாக எந்நாளும் உணர்ந்தவனல்லன். ஏதோ ஒரு கொலை செய்ய வேண்டுமென்று சிந்தித்திருந்தான். ஆனால், காரணத்தை உத்தேசிக்குமிடத்து — முன் தாமோதரன் நினைத்த பெயர்களின் சிறிதுமாற்றின் — சாத்தனைக் கொன்றாலு மொன்றுதான் அவனுக்குக், கொற்றனைக் கொன்றாலு மொன்றேதான்.

நரபாலனின் மனநிலை இத்தகையதென ஊகித்துள தாமோதரன், இருவரும் படகினிற் போம்போது, அவனிற்கு இப்புதிய சூழ்வினையைத் தெரிவித்தான். இதைக் கேட்டுத் திகைப்படைந்த நரபாலன், "ஏனடா, விரலிற் கொரு பாதகம் வளர்க்கும் வைத்தியா, நீ சொல்வதெல்லாம் உண்மையாயிருந்தாலும், விராடபத்ரனைக் கொல்லத்தான் உன்னாற் கூடுமென்றாலும், என்னை அவமதித்தது மல்லாமல், எனக்கு விரோதமாய் அன்று அர

சன்முன் சாக்ஷியும் சொன்ன அவ்வுன்மத்தன் சித்ராங்கனை அங்கத்திற் கோர் சித்திரவதை செய்யாது யான் பட்டபழி தொலைவதெங்ஙனம்?" என மறுத்தனன்.

"ஹி! ஹி! ஹி! பிரபு, ஹி! ஹி! பழிதான் கழிந்து போயிற்றே. இனியொன்றும்எஞ்சவில்லை. எப்பொழுது சித்ராங்கஇளவரசர் தாமே தங்களை வருந்தி அழைத்தாரோ, அப்பொழுதே பழிதேட வேண்டிய நியாய மில்லாமற் போய்விட்டதே," என்று தாமோதரன் தந்திரமாய் அமைதி காட்டினான். இது ஒருவாறு எற்றுக்கொள்ளத் தகுந்ததாயிருந்தது. மேலும் கொலை தேடுபவனைக் கொல்வது தர்மமுமாகுமென்று வைத்தியன் எடுத்துக் காட்டவே, சித்ராங்கனைவிட்டு விராடபத்ரனைக் கொல்வதற்கு நரபாலன் இணங்கினான். ஆனால், சிறிது நேரம் கழித்தேனும் முதலிலேயே பிறந்திருக்கவேண்டிய சந்தேகம் ஒன்று நரபாலனிற்குப் பிறந்தது. "தாமோதரா, சித்ராங்கன் நம் வயப்பட்டு விராடபத்ரனின் உயிரிற்கு இறுதிதேட இசைவான் என்றெண்ண இடமில்லை. நானொருகாலத்தில் இச்சூழ்ச்சியை ஒதியுள்ளேன். அவன் ஒவ்வான்" என்றனன். சூழ்வினை அத்தனைக்கும் மூலாதாரமான இந்த நினைவு தன் புத்தியில் இதுகாறும் தோன்றாததற்குத் தாமோதரன் நாணினான். மறுபடி இருவரும் சேர்ந்து இந்த இக்கட்டிற்கு யாது செய்வதெனச் சிந்தித்தனர். முடிவில் "பிரபு, சித்ராங்கன் நாம் காட்டும் இக்கொலைநெறிக்கு இணங்குவானோ அல்லனோ வென்று முதலில் குறிப்பாக அவன் மனதின் ஆழத்தை அளந்து பார்ப்போம். இசைந்தால் விராடபத்ரன் தொலைந்தான். இணங்குங் குறி இல்லையாயின் அதனோடு விட்டுவிடுவோம். நாம் முன் கொண்ட நினைவுங் கருமம் இருக்கவே இருக்கின்றன. இளவாசன் தொலைந்தான், அல்லவா?" என்றனன் தாமோதரன்.

'பழிக்கு இனி நியாயமில்லை' என்று சற்றுமுன், சித்ராங்கனைக் கொல்லாது விடுதற்குத் தாமோதரன் இயம்பிய தந்திரத்தை இதற்குள் அடியுடன் மறந்த நரபாலன் அவனது அறிவை மகிழ்ந்து இந்நெறிக்கு ஒவ்வினன். நெஞ்சகக் கள்வர் இருவரும் வழியில் செய்துகொண்ட முடிவு இது. அதனை நிறைவேற்றுதற்கொத்த விதங்களையும் ஆராய்ந்து கொண்டனர்.

ஆதலால், இப்பொழுது சித்ராங்கன் கோபத்துடன் மொழிந்த வசைகளைக் கேட்கவும் அவன் மனத்தினாழம் இருவர்க்குந் தெரிந்துவிட்டது. "நான் சொன்னது உண்மை யாயிற்றன்றோ" என்பான்போல் நரபாலன் தன் சகாயனைப் பார்த்தான். தாமோதரனும், "இனிச் சேர்வதைக் கருதுவோம்" என்று தன் பார்வையால் பதிற்சொல்ல, நரபாலன் சித்ராங்கனை நோக்கி, "இளவரசே, இத்துணை மடமை நின்பா லிருக்குமென்றுயானெண்ணவில்லை, காந்திமதியைப் பற்றியல்லவோ பேசிக்கொண்டிருந்தோம். வதனமதிக் குடைக்கீழ் அவளாளும் பெண்மையரசை நினது ஆட்சிக்குட் படுத்தாது தாழ்வதை நாங்கள் விளையாட்டாய்ச் சொல்ல, நீ விபரீதமாய்க் கொள்வதேனோ" என்று சொல்லவும், "இதற்காகப் பிரபுஅவர்கள் முன்பட்ட பாட்டிற்குக் கைபோயிற்று; இப்பொழுது இளவரசர் கழுத்தையே காட்டுகின்றார்" எனத் தாமோதரன் முடித்தான்.

தந்திரமாய் இவ்விருவரும் சங்கேதப்படி இரட்டுறமொழிந்த உத்தியைச் சித்ராங்கன் அறிந்திலனாதலால் கோபத்தை நகையாக மாற்றி "அவ்வரசைக் கைப்பற்றுவதெங்ஙனம்; யுத்தாயுதங்கள் எவை.?" என்று வினவினன்.

"கரும்புண்டு வில்லிற்கு, மலருண்டு அம்பிற்கு...... அக்கியாஸ்திரம் சந்திரன், வாயு அஸ்திரமும் வாடைக் காற்று......" என்று சித்ராங்கனின் நினைவை மாற்றுவதற்காக நரபாலன் சொல்லி வருகையில், தாமோதரன் வழக்கம்போல் இடையே புகுந்து, "மோகனாஸ்திரம் சித்ராங்க இளவரசரவர்களே" என்று முடித்துவிட்டான்.

சித்ராங்கனுக்குச் சிரிப்புப் பெருகியது. சிற்றப்பனையும் மற்றுளோரையும் சற்று மறந்தான். "பார்த்தேன் பார்த்தேன், அஸ்திரம் எல்லாம் அற்றுப் போயின. அவளிருக்கும் கோட்டையை எதிர்ப்ப தரிது" என்றான்.

"ஆயின் மதில் வளைந்து முற்றுகை போட வேண்டும்." என்றனன் நரபாலன்.

"செவ்வியும் இடமும் செவ்விதாய் நேர்வதில்லையே!" என்று கூறிச் சித்ராங்கன் பெருமூச்செறிந்தான்.

தாமோதரன், "அடியேனைப் பொறுத்தருள வேண்டும். அரசியல் மந்திரத்தில் நாயினேன் நுழைய நியாயமில்லை......நாம் பேசிவரும் மாதரசி இளவரசாது மாளிகையையே அடையப் போகின்றாளாதலால் முற்றுகையும் எளிதாய் இடையூறின்றி நடக்கலாகும்," என்றவுடன் இவ்விரட்டைப் புலவர்களின் மற்றொருவன், "சித்ராங்கா, நாளைக்குக் காந்திமதி சித்ரமோகன மாளிகையைச் சேர்கின்றாள். இன்றைக்கே நீ அங்குப் போயிருந்தாலோ? என்று புதியதாய் அப்பொழுதுதான் தோன்றிய எண்ணம்போல் நடித்துச் சொன்னான்.

இதற்கு எதிர் மூச்சுப் போடவேண்டிய தாமோதரன், "ஹி! ஹி! ஹி! அவ்விடத்தில் இளவரசரவர்களின் தேவியார் இருப்பதால்..... ஹ! ஹ! ஹ! போவதற்கு நாணினர் போலும்......" என்று சொல்லும்போதே இளவரசன் கடுகடுத்து, "நாணினேனோ! எனதுயிர்க்குரிய மாலினியை மணப்பதற்குக் களையாய்நின்ற அப்பாதகி இருந்த திசையையுந் திரும்பிப் பாரேன்" என்று கையைக் கையுடன் அறைந்தான்.

"நாயினேன், வரம்பிகந்து நவில்வதாகத் தேவரீர் நினையீராயின்......அச்சீமாட்டி இன்றே அம்மாளிகை விட்டகலும் வண்ணம் யான் செய்யவல்லேன்" என்றனன் தாமோதரன்.

"ஏஎ, கீழ்மகக் கயவா, என் உரிமையைக் கொண்டு அவளை அம்மாளிகை விட்டேகும்படி விதிக்கச் சொல்கின்றனையோ! பகையாயிருப்பினும் என் பெருமைக்குத் தகாதன செய்யேன்" என்று சித்ராங்கன் கூறினான்.

"மன்னர் பெருமையும் என்போன்ற மடயர் சிறிது அறிவர். பெரும, தமது பேரோடு பொறியிட்டு ஒரு நிருபம் அவ்வம்மையாருக்கு நான் எழுதியனுப்பப் பணிப்பீராயின் அதனைக் கண்டபின் அரைக்கணம் அங்குத் தரியாள். தமது கௌரவத்திற்கும் குறை நேர்ந்திடாது" என்று சொல்லக்கேட்டு அரசகுமாரன், "ஆயின் எழுது பார்ப்போம்" என, வைத்தியன் கடிதம் ஒன்று எழுதி நரபாலன் கையில் நீட்டினான். நரபாலனும் அதனைப் பின்வருமாறு படித்தனன்:—

இரத்தினபுரி,

திங்கட்கிழமை

திருவளர் தேவி,

மணந்தபின் மறந்த துஷ்யந்தனை நின்னனைய மெல்லியல்மாதரான் பொறுத்தனள் ஒருபகல். அதனால் இருவர்தம் மெய்க்காதலும் நிறைவொழியக் குறைவெய்திலது. நிடதர்தம் நெடுமுடி யண்ணல் பின்னாள்காதலியைக் காரிருளில் கானகத்தேகைவிட்டுப்போனதுவும் என்னெனின்முன்னைவினையின் பயனேகாண். மனைமாட்சி அயர்ந்திருந்த இழிதகையேன் நின் செம்மலர்ச் சீறடி சிரமேற் சூட வருகின்றேன். சென்றது கருதாது நாளை உன்பாற் சேருமாறு பணித்தருள்.

சித்ராங்கன்"



இக்காதல் கூர் கடிதத்தைப் படிக்கக்கேட்ட சித்ராங்கன் சிறுநகை யெய்தி, "அடே! பாபி, நீ காதலர்க்குத் தூதுவனுமாதல் கூடுமென இதுவரை எண்ணினேனல்லேன்......மற்று, மந்தாகினியை மாளிகைவிட் டகற்றுதற்கு ஏற்ற சொல் ஒன்றும் இல்லையே......" என்று வினவிவருகையிலேயே சினமரும்பி, "ஏனடா, என்னை நிந்திக்கத்தான் நினைத்திருக்கின்றனையோ! கருதினும் கைக்கும் அக்காதகியின் காலையோ யான் போய்ப் பிடிப்பேன், சீ சீ!" என்றன்.

தாமோதரனோ சித்ராங்கனின் சினத்தைச் சிறிதும் பொருள்படுத்தாது, "அக்கால்கள்தாம் அம்மையாரைச் சுமந்து ஓடியே விடுமே!" என்றனன்.

சித்ராங்கனிற்கு விஷயம் விளங்கவில்லை. நரபாலனைப் பார்த்து, "நரபாலா; இப்பித்தன் யாவன்! புன்கவி புனைந்த நூல்போல் தன்னுரைக்குத்தானே பொருளுணராது பிதற்றுகின்றான்," என்றுரைக்குமளவில் தாமோதரன் நரபாலனை நோக்கிப், "பிரபு, நான் சகல சாஸ்திர பிரவீத்தன் என்பதைத் தாங்கள் இளவரசர் பிரானுக்குத் தெரிவித்த தில்லையெனத் தோன்றுகின்றது." என்று சொல்லினனாய்ச் சித்ராங்கனிடந்திரும்பி, "அரசே, யான் கவியல்லன். பொய்யைப் புனைந்துரைக்கின்ற காவியங்களை நான் கையால் தொட்டதுமில்லை. எனக்குமுன் னமைந்த ஆசானும் அணியிலும் யாப்பிலும் பொருளிலாப் பொருளிலும் ஆழ்ந்து நீ மனப்பால் குடித்து வாணாளை வீணாளாக்க வேண்டாவென்று விதித்து எனக்குக் சாத்திரங்களை போதித்துளான். சாஸ்திர ஆராய்ச்சி யொருவனுக்குச் சக்தியும் நினைத்ததைச் சாதிக்கும் திறமுந் தரும். பித்தரைப்போல் சொல்லால் உழக்குகின்ற கவிகளை யான் துரும்பாகவும் மதியேன். யான் கற்றறிந்த சாஸ்திர ஞானம் முழுவதையும் சிறிது காலமாக மாநட இயற்கையின் போக்கினை ஆராய்வதிலேயே செலுத்தி வந்துளேன். அவ்வாராய்ச்சி முதிர்வடைந் திருப்பதாற்றான் இக்கடிதம் இவ்வாறு எழுதப்பட்டுளது" என்று தன் மொழிகளைப் பெருமையாய்ப் பொழிந்தான்.

"ஆயின், நின் சாத்திரப்படி இக்கடிதத்திற்குப் 'பாஷ்யம்' யாது?" என்றனன் இளவரசன்.

"அரசே, கேள். ஸூக்தங்கள் சூரியனைப் 'புருஷன்' என்று அழைக்கின்றன. அவனுக்குச் 'சாயை' எனும் மனைவி உண்டு. இந்தக்குறிப்பு உணர்த்துகின்ற பொருள் யாதெனத் தெரிந்தவன் நான் ஒருவனே. புருஷன் படைத்த மனைவியர் நிழலே போன்றவர். நிழலின் குணத்தை ஊகித்து ஆராயுங்காலையில் எனக்கொன்று புலப்பட்டது. தொடர்வோமெனின் நிழல் அகன்று விலகும், நாம் விலக அது நாடியணுகும். இருபோதும் நாம் காலையோ விட்டிலது. ஸ்திரீதத்துவம் அத்தகையதே. தேவரீர் வாராவரையில் வரவை எதிர்நோக்கி எங்கும் அச்சீமாட்டி தாங்கள் வருவதனால் இடத்தையே விட்டுப் போய்விடுவது திண்ணம். மானுட இயற்கைக்கு விரோதமாய் எதுவும் நடைபெறாது," என்றான் தாமோதரன்.

உத்தமியர் உறவும் பழக்கமுமின்றிக் கூடா வொழுக்கமேபூண்டு திரிந்துள இளவரசனுக்கும் இவ்வைத்தியன் மாதர்களைப்பற்றிக் கொண்டுள கொள்கை அனுபவத்திற்கு ஒட்டியதாகவே தோன்றியது. ஏவலாளன் மூலமாய் அக்கடிதத்தை மந்தாகினியிடம் அனுப்பினான். மறுநாட் காலையில் படகுகொண்டு நதிவழியே அம்மூவரும் சித்ரமோகன மாளிகைக்குப் போவதென நிச்சயஞ் செய்தனர். நரபாலனும் தாமோதரனும் உதயத்தில் மீண்டங்கு வருவதாகச் செப்பி விடைபெற்றேகினர். சித்ராங்கன் மனையுட்சென்று பிரதாபதீரருக்குத் தனது எண்ணத்தைத் தெரிவித்தான். அவர் சிறிது தியக்கங் கொண்டு, "அரசே, நீ யெமக்கு விருந்தாயிருத்தலை மறத்தலாகுமோ?" என்றனர்.

'விருந்தென்று இயம்புவானேன். நுந்தம் காவலில் யான் சிறையே இருகின்றேன் என்னின் அதனை அவ்வாறே சொல்லி விடுதல் நலம். ...ஆயின் யான் எண்ணியபடி செய்ய எனக்குரிமை இல்லையோ!"

"இளவரசே, நீ, நரபாலனுடனும், பார்வைக்கே பெரும் பாவிபோல் தோன்றுகின்ற இன்னொருவனுடனும் பேசக்கண்டேன். அவர்கள் நின் நன்மையைக் கருதார்......சதியாலங்குன்னைச் சாய்த்துக்கொடு போகின்றார்—ஆகையால்...."

"நலம் வரினும் தீதுவரினும் சித்ரமோகன மாளிகைக்கேகச் சித்தங் கொண்டுளேன். ஆணையால் என்னை விலக்க இயலுமாயின் முயல்மின்...மற்றொன்றும் அறிவுறுத்த வேண்டா"

"ஆணையிட்டு நின்னை மறிக்கும் அதிகாரம் எனக்குத் தந்திலர்—கடவுளே நினக்குக் காப்பாக—செல்வதாயின் செல்" என்று பிரதாபதீரன் மனங்கவன்று விடைதந்தனன்,

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

(487-வது பக்கத் தொடர்ச்சி.)

### அன்பே அருந்தமிழ்.

காதலன்காதலி கதையை எடுத்துக் காட்டாக எடுத்து விளக்கினார்களே அன்றி, மற்றைய இடங்களில் அன்பில்லை என்று அவர்கள் கொள்ளவில்லை. தாயிடத்தும் பிள்ளையிடத்தும் இவ்வன்பினைக் கண்டார்கள். பின்ளைத்தமிழ் என்ற பெருந்தமிழ் நூற்றுறையை வளர்த்தார்கள். பெரியாழ்வாரே இத்துறையைச் செப்பனிட்டு யார்க்கும் பயன்படச் செய்தார். அவருடைய திருமொழி அவ்வன்பினை அழகுபட விரித்துரைக்கின்றது. ஒப்புயர்வற்ற இளங்குழவியாகிய கண்ணபிரானது திருவிளையாட்டை அப்பெருமானது தாயும் தந்தையும் உற்றாரும் மற்றாரும் கண்டு களித்துக் கடவுளுருவாய் இன்ப அன்பில் திளைத்ததை இனிதாகப் பாடுகின்றனர். பெரியாழ்வார் விரித்துக் கூறியவற்றை ஒருபத்துப் பாட்டில் குலசேகராழ்வார் சுருக்கிக் கூறுவர்,

முந்தை நன்முறை யன்புடை மகளிர்
முறைமுறை தம்தம் குறங்கிடை இருத்தி
எந்தையே என்தன் குலப்பெருஞ் சுடரே
எழுமுகில் கணத்தெழில் கவரேறே

உந்தை யாவனென்று உரைப்ப நின்செங்கேழ்
விரலினும் கடைக்கண்ணினும் காட்ட
நந்தன் பெற்றனன் நல்வினை இல்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே.

முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறுதாமரைக்கையும்
எழில் கொள் தாம்புகொண் டடிப்பதற்கு எங்கு
நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவைகண்ட அசோதை
தொல்லை இன்பத் திறுதிகண்டாளே"

இதற்குமேல் இதைப்பற்றிப் பாடக் கூடியவர் யார்?

கொழுநன் இறந்ததும் கொம்பனையாள் இறப்பதனை அன்புநிலை என்று உயர்த்தியதுபோலத் தன்பிள்ளை இறந்ததும் தாயார் இறத்தலையும் தமிழர்கள் ஏத்திப் புகழ்வர். இதனைத் தலைப்பெய் நிலை என்பர், அதுதான்,

"இன்கதிர் முறுவற் பாலகன் என்னும்
தன்கடன் இறுத்ததாய் தபுநிலை உரைத்தன்று

என்று கூறி அதற்கோர் எடுத்துக் காட்டாக,

இடம்படு ஞாலத் தியல்போ கொடிதே
தடம்பொருங்கண் பாலகன் என்னும்—கடன்கழித்து
முன்னெயிற்றுப் பேதையாள் புக்காள் முரண்அவியா
வன்னெயிற்றுக் கூற்றத்தின் வாய்"

என்று ஐயனார் இதனார் பாடியுள்ளார். தகடூர் யாத்திரை எனும் நூலில் நெடுங்கோளன் என்பவன் இறந்தபோது அவனோடு அவன்தாயும் இறந்தானாம். அவன் பாடியதாக வரும் ஒருபாட்டினை நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுவர்,

"எற்கண் டறிகோ எற்கண் டறிகோ
என்மக னாதல் எற்கண் டறிகோ
கண்ணே கணைமூழ் கினவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
வாயே, பொங்கு நுனைப்பகழி மூழ்கலிற் புலர்வழித்
தாவ நாழிகை அம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரம் கடந்தன குறங்கே
நிறம் கார்ந்து பலசரம் நிரைத்தன அதனால்
அவிழ்பூ வப்பனை கிடந்தோன்
கமழ்பூங் கழற்றிங் காய்போன் றனவே"

இதனால் தலைப்பெயல் பழையகாலத்தில் பெருவழக்காக இருந்ததுபோலும் என எண்ண இடமுண்டு. இராமனைப் பிரிந்த தயாதன் புலம்பி உயிர்விட்டதனைக் குலசேகராழ்வார் அழகாகப் புனைந்துரைத்துப் புலம்புவார்.

வாபோகுவா இன்னம்வந்து ஒருகால்
கண்டுபோ மலராள் கூந்தல்
வேய்போலும் எழில்தோளி தன்பொருட்டா
விடையோன்தன் வில்லைச் செற்றாய்
மாபோகு நெடுங்கானம் வல்வினையேன்
மனமுருக்கும் மகனே இன்று
நீபோக என்னெஞ்சம் இருபிளவாய்ப்
போகாதே நிற்கு மாறே.

தேனகுமாமலர்க் கூந்தல் கௌசலையும் சுமித்திரையும்
சிந்தை கோவக்
கூனுருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட கொடிய
சொற்கொண்டு இன்று [வன்தன்
கானகமே மிகவிரும்பி நீதுறந்த வளநகரைத்
துறந்து நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன் மனுகுலத்தார்
தங்கள் கோவே.

கம்பர் தமிழர் வழக்குப்படி இதனைப் பாடியுள்ளார்.

நாயகன் பின்னும் தன் தேர்ப்பாகனை நோக்கிநம்பி
சேயனோ யணியனோ என்றுரைத்தலும் அனையன் [செய்ய
வேயுயர்கானம் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினன் என்றான் என்றபோழ்தத்தே யாவி
போயினன்.

இவ்வாறே நண்பராயினரும் அன்பினராய் இருத்தலும் தமிழர் அறிந்த தொன்றே. கோப் பெருஞ்சோழன் என்ற பழந்தமிழ் அரசன் இறந்தமைகேட்டு அவனது நண்பினராய பிசிராந்தையார் உயிர் துறந்தமை புறநானூற்றால் விளங்குகின்றது.

"கேட்டன் மாத்திரை யல்லதி யாவதும்
காண்டல் இல்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமையர் ஆயினும்
அரிதே தோன்றல் அதற்பட் ஒழுகல் என்று
ஐயங் கொள்ளன்மின் ஆறறி வாளீர்
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே"

என்று இறக்குந் தறுவாயில் இருந்த கோப்பெருஞ்சொழன் "இப்போதே வருவர் பிசிராந்தையர் அவருக்கும் இடம் ஒதுக்கிவையுங்கள்" என்று சொன்னதும் சொல்லாததுமே பிசிராந்தையாரும் வந்து அவனோடு ஒன்றாக உயிர் துறந்தார். இதனைப் பாராட்டிப் பொத்தியார்

நினைக்கும் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோடு ஈங்கிது துணிதல்
அதனினும் மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசை மரபாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்
வருவன் என்ற கோனது பெருமையும்
அது பழுதின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே.

அதனால்,

தன்கோல் இயங்காத் தேயத்துறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை இழந்த இவ்வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே

என்று புலம்பினர். பரிமேலழகர் "புணர்ச்சி=ஒருதேயத் தாதல், பழகுதல்=பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சி ஒப்பின் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாகிய நட்பினைப் பயக்கும் என்பதாம்' என்று

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்,

என்ற திருக்குறளுக்கு உரை கூறுவர். இக்கதைகள் மெய்யாயினும் ஆக, பொய்யேயாயினும் ஆக. ஆனால் இக்கதையைச் சொல்லிவரும் நாட்டினர் அன்பின் இயல்பினை அறிந்திருந்தனர் என்பதை மறுக்கமுடியுமா? மறக்கமுடியுமா?

முடிவாகக் கடவுளிடத்தும் இவ்வன்பினைக் கண்டனர். முருகப்பெருமானது அன்பிற்குரியாள் வள்ளியம்மை என்னும் தமிழ்ப் பெருந்தாயன்றோ? உலகத்



துயிர்கள் முருகனிடத்து உண்மை அன்புடையவர்களாகவேண்டுமானால் என்னசெய்யவேண்டும்? நாம் முன் கூறிவந்த காதலன் காதலி கதைப்படி ஒவ்வொருவரும் வள்ளியம்மையார் ஆகவேண்டும். பழந்தமிழர்கள் தம்மை வள்ளியம்மை எனவே நினைத்துக் கொண்டு முருகனிடம் அன்பு பாராட்டி வள்ளியம்மையின் உருவமும் வடிவமும் உடையும் நடையும் ஒப்பனையும் பூண்டு முருகனது கோயிலில் அவனுளங்களிக்க இவர்கள் மனமகிழ ஆடிப்பாடி அன்புருவானார்கள். இதனை வள்ளிக் கூத்தென்பர். இதனைப் புறத்தினையாகக் கொண்டு போர்வீரர் வெற்றிவேண்டி ஆடுவது ஒன் றெனத் தமிழ் நூல்களும் கூறும். ஆனால் அவ்விடத்தில் அன்பு விளைந்து பயிராகும் என்பது வெள்ளிடை. பின்னர் அத்தமிழர்கள் கடவுளைப் புகழ்ந்து பாடுகையில் அவர் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள ஊரினைப் பாடுவார்கள்; அஃது இறைவன் இருப்பிடம் என்பதைக் காட்டுவதாக அவ்வூரில் உள்ளார் கொண்டொழுகும் அன்பினைந்திணை ஒழுக்கத்தைப் பாடுவர். பரிபாடலில் இவ்வாறு பயின்று வருதல் காண்க.

காதலனும் காதலியும்தோழியும் பேசுவதைக் கூறிப் பின் இத்தகைய "உடம்புணர் காதலரும் அல்லாரும் கூடிக் கடம்பமர் செல்வன் கடிநகர் பேண." எனப் பரங்குன்றத்தினைப் புகழ்தல் காண்க (8-ம் பரிபாடல்). ஒரு நகரின் உயர்வைக்காட்டும் அடையாளமாக அன்பொழுக்கத்தை எடுத்துக் காட்டினால் அஃது எவ்வளவு உயர்ந்ததாக கருதப்பட் டிருக்கவேண்டும். இன்றளவும் நாட்டுப்படலமும் நகரப்படமும் பாடுவார் இவ்வொழுக்கத்தினைப் பாடியே நாட்டையும் நகரத்தையும் சிறப்பிப்பதும் காண்க. பின்னர் உயிர்களைப் பெண்ணாக முற்றுவமையாக்கி அன்புபாராட்டுவதைக் காதலன் கதையாகவே கூறுவர். அவ்வுயிர்ப்பெண்கள் கடவுளாகிய காதலனை நினைத்துப் பாடுவதுபோல் பாடுவர்.

மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயே மதிமுகத்த
பனைக்கைம்மா உரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாம் உரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச் சோர்வா
என்று பாடுகிறார் திருநாவுக்கரசர். [ளே.

உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக் [கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் [கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டவன் மார்வில் எறிந்து என் [அழலைத் தீர்வானே

எனப் பாடுகின்றார் ஆண்டாள் அம்மையார்.

சேரமான் பெருமாள் திருவுலாப் பாடுகின்றார். திருமங்கை மன்னன் மடல் பாடுகின்றார். அந்தாதி, மாலை, கலம்பகம் முதலியவற்றிலும் அகப்பொருள் துறைகள் பயின்று வருகின்றன. கோவையாக ஆளுடைய அடிகளும் நம்மாழ்வாரும் பாடுவது காண்க.

நீயலையே சிறு பூவாய் நெடுமாலார்க் கென்தூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே இருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனி உனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே.

என்றெல்லாம் பாடுகின்றார் நம்மாழ்வார். திருக்கோவை முதலாக வரும் கோவைகளுக்கு அளவு உண்டோ?

நாரதர் பக்தி சூத்ரமும் சாண்டில்யர் பக்தி சூத்ரமும் பழைய நூல்களேயாயினும் அன்பு நெறியை வளர்த்தவர்கள் இராமானந்தர் முதலாகவந்த துளசிதாஸ்,சைதன்யர், நாமதேவர் துகாராம் முதலானோர் ஆவர். இவர்கள் எல்லாம் இராமாநுஜர் வைணவமதக் கொள்கைகளை ஒருமுறைப் படுத்திக் கோவைபடுத்தியபின் தோன்றி அவரை அவ்வழியில் பின்பற்றியவர்கள் ஆவார்கள். இராமனுஜரோ நாலாயிரத்தைப் பின்பற்றியவர். அப்பெரியார், வேதாந்த சூத்திரங்களுக்கும் கீதைக்கும் நம்மாழ்வார் கருத்துக்கிணங்க உரை எழுத வேண்டினார். பின்னர் நம்மாழ்வார் பாடல்களுக்கும் விரிவுரையும் எழுத விரும்பினார். போதியகாலம் இல்லாமையால் தம்மை வழிப்பட்டுத் தம்மிடம் கற்றவரைத் திருவாய்மொழிக்கு உரைகாணச் செய்தார். ஆகவே திருவாய்மொழியே திருமாலை அன்புநெறியால் வழிபடுவார்க்கு வழிகாட்டி யாயிற்று. திருவாய்மொழியோ அன்பினைந்திணை ஒழுக்கத்தினைக் கூறுவது. ஆகவே அன்புநெறி தமிழர்நெறி எனலாம். அன்பு என்ற சொல்லே அவர்கள தாயபோது அந்நெறியும் அவர்கள் கண்டதொன்றேயாகும். பக்தி மார்க்கம் என்னும் அன்பு நெறியை ஒரு பெண்ணுக்குக் கூறும் வடமொழி பாகவதம் அப்பெண் தெற்கே இருந்துவந்ததாகவும் புகழ்கின்றது. இதனாலேயும் அன்பென்பது தமிழர்கள் கண்ட உண்மை என வெளியாகவில்லையா? இதனாலல்லவா திருமூலர்,

தமிழ்மண்டலம் ஐந்தும் தாவிஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழு மனமும் எம்மாதி யறிவும்
தமிழ் மண்டல மைந்தும் தத்துவமாமே

எனத் தமிழ்நாட்டைப் புகழ்கின்றார்.

வீட்டின்பத்திற்கு உவமையாவது அன்பினைந்திணையில் வரும் இன்பமே ஆகும். திருக்குறளிலே காமத்துப்பால் நோரகக் காமத்துப்பாலையும் உணர்த்திற்று, உவமைவாயிலாக வீட்டின்பாலையும் உணர்த்திற்று. ஆகவே அகப்பொருளை உணர்த்தும் நூல்கள் எல்லாம் அழியாவீட்டினை உணர்த்தும் நூல்களாகும். பழந்தமிழர் மரபில் கடைசியாகவந்த இராமலிங்கசுவாமிகளும் வீட்டின்பத்திற்கு அன்பினைந்திணை யுருவமான இன்பத்தையே உவமை கூறுகின்றார்.

இளவேனில் மாலையாய் குளிர் சோலையாய் மலர்
இலஞ்சி பூம் பொய்கை யருகாய்
ஏற்றசந் திரகாந்த மேடையா யதன்மேல்
இலங்கு மாமிய வணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்
றழைத்திடு நிலாக் காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
தன்னிசைப் பாட லிடமாய்க்
களவே கலந்தகற் புடைய மடவரல் புடை
கலந்தநய வார்த்தை உடனாய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் நின்னடிக்
கழனிழற்சுக நிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே.

எனவருதல் காண்க. நிகருமே என்பதில் உள்ள ஏகாரத்திற்கு வினாப்பொருளும் ஐயப்பொருளும் கொள்ளாது தேற்றப்பொருள் கொண்டு இவ்வாறு கூறினோம். "தன்னையுந், துறக்குந்தன்மை காமத்தே தங்கிற்றன்றே" எனக் கல்வியிற் பெரிய கம்பரும் கூறினாதலின்

தானெனு முனைப்பற்று இறண்டறக் கலந்து பழைய படி ஒன்றேயாய அவ்வீட்டு நிலையும், இவ்வீட்டு நிலையும் தம்மில் ஒற்றுமை மிகுதியும் உடையன ஆதலின், இவ்வாறு தேற்றப் பொருள் கொள்ளுதலும் சிறப்புடைத்தாம். அன்பு என்பதன் அரும் பொருளை அறிந்தவர் ஆதலின் அன்பினைத்திணைக் களவினை இகழாதுபுகழ்ந்து பாராட்டினர். இப்பெரியாரே மற்றோரிடத்தில் "பக்தி என்பது மன நெகிழ்ச்சி; மன உருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி; ஆன்ம உருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருக்கிறார் என்பதை அறிதலே ஈச்வர பக்தியாம். ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும்; அன்பு உண்டானால் சிவானுபவம் உண்டாகும்." என்று கூறியதன் பொருளையே இதுவரையும் விரித்துரைத்து வந்தோம்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 26.

## நள வெண்பா

(490-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

நளவெண்பாவில் சுயம்வர காண்டம் முடிந்தது. கலிதொடர் காண்டத்தைத் தொடங்குமுன் நமது நண்பர்கள் இதுவரையிலும் கற்றனவற்றைப் படித்துத் தேர்தல் நன்மையாம். பெரும்பான்மையோர் வெண்பாக்களுள் பல மனப்பாடம் செய்திருக்கின்றனர் என்று எமக்குத் தெரியவருகின்றது. செய்திராதவர் இனியேனும் முயன்று செய்யுள்களிற் சில பாராமற்சொல்லப்பழகுவது அவசியமாம். இல்லையெனில் இப்பாடங்களால் எய்துதற்குள பயன் முழுவதும் எய்த இயலாதவராவர்.

இலக்கியங்களைப் படித்து அநுபவிப்பதற்கு வேண்டிய இலக்கண அறிவு வெகு சிறு எல்லைக்குள் அடங்குமெனினும் அச்சிறு அளவேனும் கற்காது தீராது. இலக்கியமுறையில் நாமாக நூல்கள் எழுதத் தலைப்படுங் காலத்தில் இலக்கணம் முழுவதும் கூடியவரையில் நன்றாகக் கற்றிருக்கவேண்டியது அவசியம். அதுவன்றி இலக்கணத்தில் ஆழ ஆழ, இலக்கியத்தின் ஆழத்தையும் அழகையும் நாம் அதிகமதிகமாகக் காண வல்லவராவோம். அல்லாமல், இலக்கணமே ஓதுதற்கு மிகவும் இனியவோர் சாத்திரம். கற்கின்ற முறையில் கற்கப் புகாதவர் இலக்கணத்தை எடுத்த மாத்திரத்தில் அதன்பால் வெறுப்புக் கொள்வர். அது இலக்கணத்தின் பிழையன்று. பெரும்பாலும் கற்போர் கற்பிப்போர் ஆகிய இருதிறத்தவரது பொச்சாப்பும், ஒன்றிலும் ஊன்றப்பெறு மனமுமே காரணம்.

இலக்கணப்பயிற்சி இலக்கியங்களை ஓதுதற்கும் எழுதுதற்கும் உதவுவதோடமையாது, பயிலப்பயில அதனிடத்தேயே இன்பம் காணுமாறு செய்யும் தன்மையது. இதுவன்றி, கணிதம் தர்க்கம் முதலிய சாத்திரங்களைப் போன்று இலக்கணமும், மனதிற்கு நுர் தெளிவும் பகுத்தறியும்பான்மையும் எப்பொருட்கும் உளதாயவோர் மூலநிலையை உணரும் வன்மையும் அளிக்கும்.

நம் தமிழ்ப்பாடங்களின் வாயிலாய் ஐந்து இலக்கணங்களையும் சிறிது சிறிதாகவேனும் முழுவதும் போதிக்க நினைத்துளோம். பாடங்களிலே கூறப்படுகின்ற இலக்கணம் தொடர்ச்சியின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாய் வருவதுபோல் மேல்பார்வைக்குத் தோன்றினாலும், நாம் முழுவதாய ஓர்முறையை மனதில் வைத்துக்கொண்டே அதற்கு இயன்றபடி சொல்லிவருகின்றோம் என்பது பின்னர்த் தெரியலாகும். மாணவர்கள் இவைகளைச் சேமித்துக் கொள்வாராயின் கட்டமின்றியே யாவும்கற்று வருபவராவர். கற்றுவருகின்ற காலையில் சிற்சில சந்தேகங்கள் எஞ்சி நிற்கலாம். அதனாற் கைசோர வேண்டா. ஒரு முறைக்குப் பன்முறை சிந்தனையைச் செலுத்தி வாக்கியங்களைக் கருத்துட் கொண்டால் அச் சந்தேகம் தெளியும். அப்படித் தெளியாத விடத்தும், நன்றாய்த் தெரிந்துகொண்டவைகளை யெல்லாம் மறக்காமல் காத்து வந்தால், மேலே படிக்கப்படிக்க முன் இருந்த சந்தேகங்கள் தாமே மறைந்து கொண்டே போம்.

இதுகாறும் யாம் கூறிய இலக்கண விஷயங்களைச் சுருக்கமாக ஓர்முறை இங்கெடுத்துச் சொல்லிவிட்டு மேல் செல்லல் தகுதியாம்.

தமிழிலே இலக்கணம் ஐந்து வகையன. அவைதாம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், அணி இலக்கணம், யாப்பிலக்கணம்.

(1) எழுத்துக்கள் எல்லாம் பேசும்போது ஒலி வடிவமும் எழுதும்போது அவ்வொலிக்கு அடையாளமாக வரி வடிவமும் உடையன. எல்லா ஒலிகளும் எழுத்துக்கள் ஆகா. தும்மல், இருமல், கையோடு கைதட்டல், இடி இடித்தல், மணியடித்தல் மழைபெய்தல் முதலிய நிகழும்போது ஒலி எழுகின்றது. எனினும் அவைகளை எழுத்து என்று சொல்வதற்கில்லை. எந்த வொலிகளை உபயோகித்து வார்த்தைகளாக்கலாமோ அவ்வித ஒலிகளே எழுத்துக்களாகும். க என்பது ஒரு ஒலி, ர என்பது ஒரு ஒலி, டி என்பது ஒரு ஒலி. இந்த மூன்று ஒலிகளையும் க ர டி என்று சேர்த்தால் ஒரு விலங்கைக் குறிக்கும் வார்த்தையாகும். ஒரு தும்மலும் ஒரு இருமலும் ஒரு இடியும்சேர்ந்து வார்த்தை ஆகா. ஆகையால் இவை எழுத்துக்களும்ஆகா. எனவே வார்த்தை ஒன்று ஆவதற்கு ஆதாரமாயிருக்கின்ற சப்தம் அல்லது ஒலி எழுத்து எனப்படும். எழுத்தெல்லாம் ஒலிகளே. ஆயினும் ஒலிகளெல்லாம் எழுத்துக்களல்ல.

இவ்வொலிகளை உச்சரிக்கின்ற முறையினாலும் அளவினாலும் எழுத்துக்கள் பலவகைப்படும். இவ்வெழுத்துக்கள் தனியாக ஒலிப்பதும் அவை மற்ற எழுத்துக்களோடு புணரும்போது ஒலிகள் மாறுவதும் எவ்விதம் என்று கூறுகின்ற இலக்கணம் எழுத்திலக்கணம்.

எழுத்திலக்கணம் நாம் இதுவரையில் ஒன்றுமே கூறவில்லை. இனிவரும் பாடங்களில் சிறிது சிறிது சொல்லி வருவோம்.

(2) வார்த்தை அல்லது மொழிக்குக் காரணமாயிருக்கின்ற ஒலிகள் எழுத்தாவதுபோல், நம்கருத்தைப் பிறர்க்குத் தெரிவிப்பதற்கு இவ்வெழுத்துக்கள் எனும் ஒலியால் உண்டாகின்ற குறிகள் சொற்கள் எனப்படும். எழுத்து, தனியாகவாவது சேர்ந்தாவது, கேட்பவன் அறிந்து கொள்ளும்படி ஒரு அர்த்தம் தருமாயின் சொல் அல்லது பதம் அல்லது மொழி என்றாகின்றது.



இப்படி எழுத்தினால் குறிக்கின்ற அர்த்தத்தைப் பொருந்திப்பதங்கள் பலவகைப்படும். இவ்வகைகளையும் அவைகளின் உருவம் உறுப்பு முதலியனவற்றைப்பற்றிச் சொல்கின்ற இலக்கணம் சொல்லிலக்கணம்.

பொதுவகையில் சொற்கள் பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என நான்கு வகைப்படும்என்று சொல்லியிருக்கின்றோம். ஒன்றின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் என்றும், ஒன்று செய்யும் காரியத்தைச் சொல்வது வினைச்சொல் என்றும், தாமாக ஒன்றும் குறிக்காமல் இப்பெயர் வினைச்சொற்களோடு சேர்ந்து கொண்டு அர்த்த வேறுபாட்டிற்கு ஆதாரமாயிருப்பன இடைச் சொல்லென்றும் தெரியவந்திருக்கும். பெயர்ச்சொல், ஒருபொருளின் பேராகவேனும் குணத்தின் பேராகவேனும் இடத்தின் பேராகவேனும், இதுபோன்ற பின்னும் சிலவற்றின் பேர்களாகவேனும் அமைவதும் அறிந்திருப்பீர். ஒன்றன் பேர் குறிப்பினால் சந்தர்ப்பத்தை நோக்கி மற்றொன்றிற்கு ஆகின்ற ஆகுபெயரும், உவமை குணம் இடம் இவைகளால் அது நேர்கின்ற விதமும் சொல்லியிருக்கின்றோம். இன்னும் சில, பெயர்ச் சொல்லைப்பற்றிப் பின்னர்க்கற்பதற்கிருக்கின்றன. அவைகளில் வேற்றுமை முக்கியம்.

வினைச் சொல்லில் முற்று எச்சம் என இருவகையும், அவ்வெச்சம் வினையெச்சம் பெயரெச்சம் எனப் பிரிவதும், வினையெச்சத்திற்குக் காரணம் காரியம் உடனிகழ்ச்சி எனும் மூன்று பொருள்கள் இருப்பதும் இங்குக் கண்டிருக்கின்றோம். உடன்பாடு எதிர்மறை எச்சங்களின் உருவமும், செய்யா என்னும் ஓரே வாய்பாடு, எதிர்மறை வினைமுற்று, உடன்பாட்டு வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஆகி இடத்திற்கு ஏற்றவாறு வருதல் கூடும் என்பதைக் கண்டிருக்கின்றீர். வினையாலணையும் பெயரைப் பற்றியும் முற்றெச்சத்தைப் பற்றியும் ஒரு சிறிது சொல்லியிருக்கின்றோம்.

இனி இடைநிலை சாரியை பகுதி விகுதி ஆகிய உறுப்புக்களையும் மற்றுள விஷயங்களையும், தெரிநிலை குறிப்பு எனும் பேதமும், வியங்கோள் ஏவல் முதலிய வினைகளின் தன்மையையும் ஆராய்வோம்.

இடைச்சொல், பெயர் வினைகளோடு இணங்கிப் பொருள் தருவதும் செய்யுளில் ஓசைக்கு மாத்திரம் அசைகளாக வருவதும் பார்த்திருப்பீர். இடைச் சொற்களில் ஏ ஒ உம், என்னும் மூன்று சொற்களுக்குள்ள பொருள்களில் சிலவற்றையும் சொல்லியிருக்கின்றோம். மற்ற இடைச் சொற்களின் பொருள்களையும், இடைநிலை, விகுதி, வேற்றுமை உருபு முதலியன இடைச்சொற்கள் என்பதையும் இனிக் கூறி வருவோம்.

உரிச்சொல்லைப் பற்றி இதுமட்டும் ஒன்றும் கூறவில்லை.

(3) எழுத்தென்னும் ஒலிகளைக் கொண்டு அர்த்தத்தை உடைய சொற்களாக ஆக்கி இச்சொற்களைச் சேர்த்து விஷயங்களைத் தெரிவிக் கின்றோம். சொற்கள் சேர்வதனா லுண்டாகின்ற பயன் அவை வாசகங்களாயமையுங் காலையில் தெரிவிக்கின்ற பொருளாம். பொருளினைப் பற்றிக் கூறுகின்ற இலக்கணம், பொருளிலக்கணம். இப்பொருளிலக்கணத்தை அகப்பொருள் என்றும் புறப்பொருள்என்றும் இருபெரும்பிரிவுகளாகப் பிரித்துளர். காதலன் காதலிகளுக்கிடையே நிகழ்கின்ற விஷயங்களைக் கூறுவது அகப்பொருளென்றும் மற்ற விஷயங்களில்எதைப்பற்றிக் கூறினாலும்அதுபுறப்பொருளென்றும் கூறலாம்.

'அகப்பொருள் வரலாறு' என்னும் தலைப்பின் கீழ் ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் இப்பத்திரிகையில் எழுதி வருவது அகப்பொருளிலக்கணமாம். அதனில் உள்ள ஊடல், பொய்பாராட்டல் போன்ற இரண்டொரு துறைகளையும் இத்தமிழ்ப் பாடத்தில் கூறியுள்ளோம். மெய்ப்பாடு சுவை, முதலிய விஷயங்களை ஸ்ரீமான் மீனாக்ஷி சுந்தரன், சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்' என்ற தலைப்பின்கீழ் விளக்கி இருக்கின்றார். புறப்பொருளைப்பற்றி நாமொன்றும் கூறியிருக்கவில்லை. அகப்பொருள் முடித்தபின் அதனை எடுத்துக்கொள்வோம்.

(4) எழுத்துக்களாலாகிய சொற்களால் தெரியவரும் பொருளை அழகுபெறக் கூறுவது அணி. இவ்வணிகளைப்பற்றிக் கூறும் இலக்கணம், அணியிலக்கணம். 'இந்தக் குளத்தின் நீர் தெளிந்து இனிமையாயிருக்கின்றது' என்று சொல்வது அவ்விஷயத்தை மாத்திரம் சாதாரணமாகச் சிறப்பாய அழகு ஒன்றும் ஊட்டாமற் சொல்வதாம். அவ்வாறின்றி, இக்குளம் "சான்றோர் கவியெனத் தெளிந்திருக்கின்றது" என்பது அவ்விஷயத்தையே அணிபெறச் சொல்வதாகும். கவிகள் தம் திறமையால் பலவித உபாயங்களைக்கொண்டு தாம் கூற வரும் விஷயங்களை அழகு செய்வர்.

உவமை, உருவகம், உயர்வுநவிற்சி, ஒழித்துக்காட்டல், தற்குறிப்பேற்றம், விரோதம் ஆகிய சில அணிகள் அமையுமாறும் அவைகளின் சிலவகைகளும் ஆங்காங்குச் சொல்லிவந்துளோம். இன்னும் பல அணிகள் சொல்வதற் கிருக்கின்றன. இனிவரும் காண்டங்களில் அவைகளைக் காணலாம்.

(5) கருத்திற்கு அழகாய் இருக்கும் விஷயத்தைக் காதிற்கும் இனிமையாம்படி ஓசை ஊட்டிப் பாடுவது செய்யுள். எழுத்துக்களைச் சேர்க்கின்ற முறையாலும், மோனை எதுகை முதலிய தொடைகளை அமைக்கின்ற திறத்தாலும், அடிகளாகப் பிரிக்கின்ற விதத்தாலும் விழுமியபொருள் இழுமென் ஒலியோடு இசைக்கப் பெறும். இன்னவாறு செய்யுள் அமைகின்ற இலக்கணத்தைக் கூறுவது யாப்பிலக்கணம்.

யாப்பிலக்கணத்தைப்பற்றி இப்பொழுது நாம் ஒன்றும் சொல்ல நினைக்கவில்லை. நளவெண்பா முடிந்த பிறகு நம் பாடத்திற்கு, "அஷ்டப் பிரபந்தம்" ஆரம்பம் செய்வோம். அதனோடு சேர்ந்து யாப்பிலக்கணம் கற்கலாம். அதற்குள் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் பெரும் பகுதி முடிந்திருக்கும்.

இதுவரையில் ஆறுமாதமும் இருபத்தாறு இதழ்களும் சுயம்வரகாண்டத்தோடு முடிகின்றன. இவ்விருபத்தாறு இதழ்களையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாகப் "பைண்ட்" செய்துவைத்துக் கொள்வது நலம்.

# மதிப்புரை.

## ஷண்முகநாதன்
அல்லது
## தனவைசிய மைனர்

(ஒரு விசித்திரத் துப்பறியுங் கதை.)

ஆசிரியர் :—திரு. சொ. பனையப்ப செட்டியார் மேலைச்சிவபுரி, மணப்பாறைவழி S. I. Ry., விலை ரூ. 1-4-0.

இந்நூலினைப் பார்க்குங்கால் நமக்கு மகிழ்வு ஓர்புறமும் அம்மகிழ்வின் காரணமாகவே வருத்தம் மறுபுறமும் விளைகின்றன. வழுக்கள் இன்றி மழமழவெனத் தமிழ் இப்புத்தகத்தினூடு தவழ்வதை ஓதுவார் யாவரும் மகிழ்வெய்தாதிரார். தமிழைச் சிறிதேனுங் கற்காமல் நாவல் எழுதத் தலைப்படுகின்றவர்களின் தொகுதியே இக்காலம் மிகுதியாயிருக்க அப்பாஷையிற் சிறந்த தேர்ச்சிவாய்ந்த நம் பனையப்ப செட்டியாரால் எழுதப்பெற்ற இந்நூல் உரை நடையில் உயர்ந்த தன்மையதென்பதிற் கையமில்லை. வருணனைப் பாகங்கள் நன்கு அமைந்திருக்கின்றன. தமிழிலே இவ்வாசிரியருக்கு உள்ள திறத்தை,

"கலவியிற் களைத்துக் கருத்தழிந்த காரிகையாரின் தடுமாறிய இன்மொழியாகிய தண்மொழியினும் மேன்மையான ஓசையுடன் வீசிய தென்றற் காற்றின் இசைவா விரண்டொரு மரங்கள் தலையை அசைத்துத் தன் தண்ணமிர்தத்தைக் கைம்மாறு கருதாது உலகத்தாருக்குப் பொழியவேண்டி, விண்மீன் சூழத் தண்ணொளி பரப்பும் அழகிய முழுமதியினை, வரவேற்பதுபோல்—ஆடியதாலுண்டான ஓசையினைத் தவிர, வேறு எவ்வகையான ஓசையுங் கேட்கவில்லை. நீல வானத்தின் நடுவண் சந்திரன், பாங்கியர் புடைசூழ நடுவிற்சென்று, ஒரு பொழிலின் எழிலினை வியந்து நிற்கும் அழகிற் சிறந்த கலைமகள் போன்று, களங்கமின்றி, அரியபெரிய நூலினிடத்து அமைந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக்களை நூலாராய்ச்சியில் விருப்பமுடைய அறிவாள னொருவன், தன் அறிவை ஒரு முகப்படுத்தி, அறிந்து மகிழ்வதுபோன்று—உலகின் பேரற்புதங்களையும், அழகினையும் ஆழ்ந்து அறிபவனையொப்ப அமைதியோடு—பிரகாசித்துக் கொண்டிருந்தான்"

என நூலினுள் வரும் இராக்கால வருணனையிலும் அது போன்ற இன்னும் பல இடங்களிலும் இனிதின் காணலாம்.

இவ்வளவு சொல்நயம் வாய்ந்த ஒருநூலில் ஆழ்ந்த இன்பமும் பயனும்இல்லாதிருப்பதற்காகவேவருந்துகின்றோம். உலகத்திலுள்ள காமம் கள் களவாதி தீமைகளை உள்ளதை யுள்ளபடி புகைப்படம் பிடித்தாற்போல் எடுத்துக் காட்டுவதே நூலிற்குரிய பயனும் பொருளும் உடைய தொழில் என்று இவ்வாசிரியர் கொண்டுளவோர் கொள்கையால் இப்புத்தகம் சொற்றிறத்திற் கேற்ற பொருள் நயம் அற்றதாய் முடிந்தது என்று மதிக்கின்றோம். பக்கந்தோறும் குடியும் களவும் சூதும் விபசாரமும் தத்தமக்குரிய விகாரரூபம் அத்தனையுங் காட்டி விவகரிப்பதால் ஆசிரியர் அதனால் ஓதுவர் மாட்டு எய்துவிக்க நினைத்த முடிவிற்கு நேர் எதிரான முடிவொன்று வந்து எய்துகின்றது. தம் நூலைப்படிப்பவர் அதனில் விரிவாக எடுத்துச் சொல்லி வருகின்ற தீமையை வெறுக்க வேண்டுமென்பது அவர் கருத்து. ஆனால் அதனை விளைவிக்க இவர் முயல்கின்ற வழியை ஆராயுங்கால் வெறுப்பு மெல்லமெல்ல வந்து இப்புத்தகத்தையே பற்றிக் கொள்ளுமோ என்னும் ஓர் அச்சம் எமக்குண்டாகின்றது. மானுட இயற்கையும் மானஸதத்துவமும் ஆய்ந்துணர்ந்தோர் உலகத்தைச் 'சீர்திருத்த' இம்முறையைக் கையாள மாட்டார். நீதிநூல்கள் இல்லாத குறையாலோ, அல்லது நீதியும் நன்மையும் யாவையென அறியாததாலோ, அநீதியும் தீமையும் இவ்வாசிரியர் மனமுளைய இக்காலம் தலையெடுத்திருக்கின்றன. அதற்குக் காரணம் வேறு, அது தீர்வதற்கு இயன்ற மார்க்கமும் வேறு, இவைகளை இப்பத்திரிகையில் "கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல் வகையும்" என்னுந் தலைப்பின்கீழ் ஒன்பது தலையங்கங்களில் ஆராய்ந்துளோமாதலால் ஈண்டெடுத்து மீண்டும் கூறல் மிகையாம்.

நீதிபோதனையே ஆசிரியரின் நோக்கமாதலால் நாவலிற்கு முக்கியமாய் இருக்கவேண்டிய கதைக்கட்டு இந்நூலில் இல்லாமற் போயிற்று. நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி, பாத்திரத்திற்குப் பாத்திரம் தொடர்பற்றுக் கிடக்கின்றன. கதையின் நிகழ்ச்சிக்கேனும் வளர்ச்சிக்கேனும் அவை பயன்படாமல் ஆங்காங்கு ஆசிரியர் செய்து வருகின்ற பிரசங்கங்களுக்கே ஆதாரமா யிருக்கின்றன. இனித் தீமையைக் கடிந்தும் நன்மையைப் போற்றியும் இவர் செய்கின்ற சொற்பொழிவுகளும் கதையின் அமைப்பிற்கு விரோதமா யிருப்பதுடன் ஆழமும் அற்றவைகளா யிருக்கின்றன. இதனைச் சிறிது நீங்கும் விளையலாம். உதாரணமாக, ஒருத்தி சோரபுருடனைத் தன் பள்ளியறையிலேற்றுவிபசாரஞ் செய்கின்ற சந்தர்ப்பத்தை இவ்வாசிரியர் மிகுந்த ஆர்வத்தோடும் வர்ணனை நயங்களோடும் விரித்துரைத்து, "என் செயலாம்! ஊழிற் பெருவலி யாவுள" எனப் பருத்த எழுத்தில் நெட்டுயிர்ப்பு வீங்குவார். அவரவர் படர்கின்ற அடாநெறிக் கெல்லாம் அவரவர் ஊழ்தான் காரணம் என்று கூறுவதைவிட ஆபத்து வேறு வேண்டா. மற்றுத் தீவினை செய்கின்றவர்கள் செய்வது அவரது ஊழினாலேயே ஆயின் நாம் 'சீர்திருத்துவதற்கு' என்ன இருக்கின்றது. ஊழைத் திருத்துவார் யாருளர்? குடிப்பவன் தன் ஊழினாலே குடிப்பான்; விபசாரஞ் செய்கின்றவன் தன் ஊழினாலே கெடுகின்றான்; செல்வத்தைத் தீ நெறியில் செலவு செய்கின்ற 'மைனர்' அவன் ஊழினாலே செய்கின்றான். எல்லாம் அவ்வாறே. ஊழிற்பெருவலி யாவுள? எனின், இந்நாவலென்ன, திருக்குறளே ஒருவரையும் செம்மைப்படுத்த இயலாது. தீத்தொழில் புரிவாரும், "இது தீமையே, அறிவேன், ஊழிற்பெருவலி யாவுள. ஆதலின் நான் செய்யவேண்டி யிருக்கின்றது" என்று சொல்லிச் சொல்லிச் செய்து கொண்டே வரவேண்டியவராகின்றனர். ஊழின் தத்துவம் இதுவல்ல. சுருங்கச் சொல்லின், "ஒவ்வொருவரும் மனதோடு செய்கின்ற செய்கைகளின் பொறுப்பு அவரதே, ஊழினதன்று. ஆதலால் எய்தும் பயன் ஊழினது," என்பதே ஊழின் கொள்கை. இவ்விஷயங்களெல்லாம் நன்கு ஆராய்ந்தபின் அவைகளை எடுத்தாள நினைப்பது நலமாம். இந்நூலின் ஆசிரியர் இவைகளை அறிந்திரார் என்று நாம் கூற வரலில்லை. அவாறிந்ததை ஐயந்திரி பில்லாவகையில் பிறர் கொள்ளுமாறு அமைக்கவேண்டு மென்பதே எமதுவேண்டுகோள்.

'ஊழ்' முதலிய அரியகொள்கைகள் உண்மையபர்ந்து இந்நூலில் பயில்வதுபோன்றே இலக்கியத்தினின்று எடுத்தாளப்பெற்ற செய்யுளொன்றும் இடம் பிறழ்ந்து



விபரீதமாய் முடிந்தது. ஒருத்தியின் அழகை மிகவும் நயமாக வருணித்துவந்த இவ்வாசிரியர்,

"சீதா தேவியின் அழகை வருணிக்கையில், அவளை, மனக்கண்ணாலன்றி, வெளிக் கண்ணாற் கண்டிலாத கம்பர்,

ஈசனார் கண்ணின் வெந்தா
னென்னுமி திழுதைச் சொல்லிவ்
வாசனு ரேதி யானைக்
கண்டன னல்ல வாற்றாற்
பேசலாந் தகைமைத் தல்லாப்
பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையா லழிந்து தேய்ந்தா
னநங்கனவ் வுருவ மம்மா.

என்று கூறியுள்ளார். நன்குளிர, ஆசைதீரச் செய்தவப் பயனாற் கண்ட நாம், இக்காரிகையை (ஆசிரியர் வருணிக்கின்ற கோகிலம் என்பவளை) இவ்வாறு வருணிப்பது பொருந்தாதோ"

என்று வினவுகின்றார் இச்செய்யுள் கம்பராமாயணத்தில் வந்திருப்பது உண்மையே. ஆனால் கம்பர் என்று பெரிய எழுத்தில் போட்டிருக்கிறபடி கம்பர் கூறியதல்ல. அவர் மனக்கண்ணால் பார்த்த சீதையின் வருணனையுமன்று. ஒருத்தியைக்கண்டு ஒருவன் அடாநெறிக் காதமுற்றான்என்பது அவளது அழகிற்குப் பெருமையாமோ? கற்பிக்கும் குறைவுண்டு தன்னைக்கண்டு இராவணன் இந்த மோகங்கொள்ளுதற்கு என்னபாவம் செய்தனோனென்ச் சீதை பின்னோரிடத்தில் புலம்புவாள். அதுவும் திருமகளின் புத்திரனாகிய மன்மதனே அவள் மீது மோகத்தால் தேய்கின்றான் என்ற வாசகம் கம்பரின் வாயில் வரவேவராது. சீதையைக் கண்டவர் யாவரும் 'அன்னை யெனக் கைகள் தலைவைத்துக் கும்பிட்டன ரென்று' கம்பர் கோலங்காண் படலத்தில் கூறியபடி, கும்பிடுவரேயன்றிக் காமம் என்றவோர் நினைவு யார்மனத்தும் எழுந்திடாமையே அவள் பெண்மைக்கும் அழகிற்கும் பெருமையாம். இதைவிட்டுக் கம்பர் மனக்கண்ணால் சீதாபிராட்டியைத் தரிசித்து மற்றவரை அவள்பால் மையலால் அறவி நீங்கும்படி செய்யும் உருவத்தினள் என வருணித்தார் என்றோர் அபவாதத்திற்கு அவரை ஆளாக்குவது அழகன்று. சீதையின்பால் இராவணனுக்கு அடங்காக் காமம் உண்டாம்வண்ணம் சூழ்ச்சி செய்த சூர்ப்பநகை சொன்ன சொற்கள் இவை. அவளொருத்தி வாயிற்கும் அவள் நினைத்த சூதிற்கும் இவ்வருணனை ஏற்றதாம். மனக்கண்ணால் கம்பர் சீதையைக் கண்டவண்ணம் இவ்வகைத்தன்று.

எம்கருத்தில் குறையெனக்காணும் இவைகளை யாம் எடுத்துக் காட்டுவது எனெனின், தமிழில் கற்றுத்தேர்ந்த இந்நூல் ஆசிரியரனையவர் நாவல் எழுதுவதை விடுத்து, ஆன்றோர் எழுதிய நூற்களை அனைவரும் எற்று உணர்ந்து அனுபவிப்பதற்குத் தகுந்த முயற்சியில் புகுதல் வேண்டும் என்னும் விருப்பினாலன்றி வேறன்று. ஓரெழுத்தும் கல்லாதவர்க்கே படிப்பதற்கும் எழுதுவதற்கும் நாவல் அன்றி வேறு கதி இல்லை. ஸ்ரீமான் பனையப்ப செட்டியார் அத்திறத்தவரல்லராதலால் நாவலமைஇதுவேண்ட உரிமையுடையவரா யிருக்கின்றோம்.

# கம்ப ராமாயணம்

189009.

## பால காண்டம்

### 6. கையடைப் படலம்.

[496-ம் பக்கத் தொடர்ச்சி]

போறுத்தி யென்றசொல் புகன்றனன் வசிட்டன்.

நிகழ்ந்தவோர் நிகழ்ச்சியினை நாடகமாகக்காட்டுவதும் கதையாக ஓதுவதும் ஆகிய இருமுறைகளில் இங்குக் கம்பர் முன்னதையும் வான்மீகி பின்னதையும் கையாண்டுளர். அதனை ஆராய்தல் பொருட்டு வான்மீகி இராமாயணத்தின் இப்பாகத்து மொழிபெயர்ப்பு முன் இதழில் வந்துளது. அயலயல் வைத்து நோக்குதற்கு எளிதாம்வண்ணம் கம்பர் மொழிந்ததையும் பொழிப்பாக முதலில் எழுதித் தருதல் பயனுடைத்தாகும். அது பின்வருமாறு:—

"அரசர்களுக் கரசனாகிய தயரதன், தனது ஒப்பற்ற வெண்கொற்றக்குடை தங்கி விளங்கவும், வெற்றிமுரசு ஒலியகலாது நறங்கவும், முனிவர் வாழ்த்தவும், மைந்தர் பிறந்து மேன்மையோடு வளர்கின்ற கரையில்லாக் களிப்போடு வாழ்கின்ற காலத்தில் ஒருநாள், அரும்புகள் நிறைந்த கற்பகச் சோலையையுடைய சுவர்க்க லோகத்திலுள்ள அமராவதி என்னும் அழகிய நகரில் வசிக்கும் தேவர்கள் அனைவரும், இந்திரனது கொலுமண்டபமோ என்று அங்ஙனகச் சந்தேகங் கொள்ளும் மனதினால் நினைப்பதற்கு அரியதும் ஆகாயத்தை அளாவியதும் ஆய ஓர் இரத்தினத்தினால் அலங்கரிக்கப்பெற்ற மண்டபம், இவன் வருதலால் பொலிவு மிகும்படி, வந்து எய்தினான். எய்திப் பரிசுத்தமாய சிங்காதனத்தில் விளங்கிய இவனை, ஆகாயத்தில் திரியும் சாரணர் கண்டு தமக்கு நாயகனாகிய இந்திரன் இவன்தானோ என்று முதலில் சந்தேகித்துப் பிறகு இவனுக்குக் கண்கள் ஆயிரம் இல்லை என்பது தெரிந்தவுடன் சந்தேகம் தீர்ந்தனர். இப்படிச் சிங்கம் போன்ற பாராக்கிரமத்தோடு தோன்றிய தயரதனிற்கு எதிரே, 'எல்லா உயிர்களையும் உலகங்களையும் இவைகளைச் சிருஷ்டிசெய்கின்ற பிரம்மனையும் இதோ படைக்கின்றேன்' என்று முன்னொருநாள் திரிசங்குவின் பொருட்டுச் சினந்து தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினான்.

"இந்த முனி வந்து எய்தியவுடன், மார்பில் அணிந்திருந்த இரத்தின ஹாரம், ஆகாசத்திலுள்ள சூரியனும் கண் கூசும்படி ஒளிவீசத் தயரதன், தாமரை மலரில் வைகும் பிரம்மதேவன் தன் சபைக்கு வந்ததும் இந்திரன் எவ்வாறு சென்று எதிர் கொள்வானோ, அவ்வாறு விரைந்தெழுந்து விச்வாமித்திரனது பாதங்களைப்பணிந்தான். பணிந்து, மணிகள் அழுத்தியவோர் பொன்னாசனத்தில் அம்முனிவரை அன்புடன் அமர்த்தி, அவர் இரு பாத மலர்களுக்கு அருச்சனைபுரிந்து 'என் கருமவாதனையெல்லாம் தேவரீர் வரப்பெற்ற இன்றே அற்றுப்போயது' என்றுரைத்துப் 'பெரியோய் நீ யிருக்குமிடந்தேடி நான் வந்து வலம் செய்து வணங்குவதுபோக அதற்கு மாறாக என்னிடமே நீசுலபமாக வந்த இது, "இந்த பூமி செய்த தவத்தினாலோ, என்றால் அல்ல. நான் செய்த

புண்ணியமோ வென்றால் அதுவும் அன்று. என் குலம் செய் தவத்தின் காரணத்தினால்தான் நேர்ந்திருக்க வேண்டும்,'' என்று முகமன்கூற விச்வாமித்திர முனிவர் இவ்வாறு மறுவிசயம் கூறினார்.

''பகைவர்களை வென்று வென்று புலால் நாற்றம் அகலாத வேலாயுதத்தை உடைய வேந்தனே, என்னைப் போன்ற முனிவர்களும், தேவர்களும் இடையூறு ஒன்று அடைவாரானால், அதுதீர்வதற்குப் பலமலைகளைக் கண்டு பெருமையால் சிரிப்பதுபோல் பனிவிளங்கும் கைலாய பர்வதமும், பாற்கடலும், தாமரையைஆசனமாக உடைய பிரம்மனது நகரமும், கற்பகமுடைய தேவலோகத்து அமராவதி நகரமும், அழகிய மாடங்களுடைய இவ் வயோத்தியு மல்லாது, வேறு எங்களுக்குப் புகலிடம் உளதோ?

'' இனிய தளிர்களைக் கொண்ட கற்பகம் வாசனையுடையதேனை இடை இடையே துளிக்கும் நிழலிலமர்ந்திருக்கும் செல்வத்தை இழந்து வந்து, நினது செழிப்பு வாய்ந்த ஒப்பற்ற குடையின்கீழ் தஞ்சமென அடைந்து இந்திரன் தன் குறையைச் சொல்லிநிற்க, குன்றுகளிற் கிடைக்கும் சிறந்த இரத்தினங்களால் அலங்கரிக்கப் பெற்ற தோள்களையுடைய சம்பராசுரனை நீ குலத்தோடே அழித்து, தேவலோகத்தை நீ உரிமையாக்கிக் கொண்டு, பிறகு நீ அந்நாள் அளித்த அரசல்லவோ வேந்தனே, இந்திரன் இன்றைக்கு ஆள்கின்ற அரசெல்லாம்.' என்றனன்.

'' இன்னவாறு அவன் உரைத்து வருகையில், முரசங்கள் முழங்கப் பெற்ற தலைவாயிலையுடைய தயரதன், அவனது முகம்நோக்கி, ஒருவராலும் கரைகாண முடியாத பெரியதொரு உவகைக்கடல் தன் உள்ளத்தில் பெருகக் கைகள் குவித்து 'அரசனாய் இருந்த பயன் இன்றுபெற்றேன். இனி நான் செய்யவேண்டியதைச் சொல்லி அருளுக'' என்று மொழியவும் விச்வாமித்திர முனிவன் பின்வருமாறு கூறுவான்.

'' விருக்ஷங்கள் அடர்ந்த காட்டில் நான்செய்யும் தவத்திற்கும் யாகத்திற்கும் இடையூறாகத், தவம் செய்பவர்கள் பயப்படும்படி வந்து அடையும் காமத்தையும் வெகுளியையும் போல், அரக்கர் நடுவிலே கெடுக்காமல், 'போர்முனையில் காப்பாய்' என்று விதித்து நின்புதல்வர் நால்வர்களில் கருநிறத்து ஒருமகனை எனக்குத் தந்திடு'' என உயிரை யாசிக்கும் யமனைப்போல் வருந்தக் கூறினான்.

'' அளவிலாத் தவத்தை அருமையாய்ச் செய்யும் விச்வாமித்திரன் சொன்ன இவ்வார்த்தை, மார்பிலே வேலொன்று பாய அப்புண்ணின் பெருந் துவாரத்தில் நெருப்பு நுழைந்ததென்ன, அவன் காதில் புகுந்தவுடன், உள்ளத்தில் உண்டாய துயரம் பிடித்துத் தள்ளுவதால், அவனது அருமையான உயிர் ஊஞ்சலைப்போல் போவதும் வருவதுமாகிப், பிறவிக்குருடனொருவன் சிறிது நேரம் கண்ணைப்பெற்றுப் பின்னும் இழந்துவிட்டால் எவ்வாறு வருந்துவானோ அவ்வாறு எமன் போன்ற வேலாயுதத்தையுடைய தயரதன் பெருந்துயரம் பட்டுழன்றான்.

'' மது துளிக்கும் மாலையை அணிந்த தயரதன் ஒரு சிறிது துயரம் நீங்கிப், ''பெரியோய், இவன் படைப்பயிற்சி இல்லாதவன், சிறுவன். நீ விதிக்கும் காரியம் இவ்வளவே யாயின், குளிர்ந்த கங்கைநீர் பக்கத்தில் ஊற்றுகின்ற சடையையுடைய சிவனும், பிரம்மனும் இந்திரனும் புகுந்து அதற்கு இடையூறு செய்வாராயினும், அவ்விடையூறுகளை விலக்கி நான் காக்கின்றேன், நின் பெரிய யாகத்திற்கு எழுந்திரு'' என்றான்.

'' தயரதன் இவ்வாறு கூறவும், விச்வாமித்திரன் கோபத்தோடு எழுந்தான். உலகைப் படைத்த பிரம்மனுக்கே முடிவுநாள் அன்று வந்துவிட்டதென்று தேவர்கள் சந்தேகம் கொண்டனர். மேலே சூரியனும் பயத்தால் போய் ஒளிந்துகொண்டது. ஸ்தாவர வர்க்கங்களெல்லாம் நிலைபெயர்ந்து திரியலாயின. மேலே உயர்ந்த இவனது செழித்த புருவத்தின் கோடி நெற்றி முழுதும் ஏறிவிட்டது. சிரிப்பும் வந்தது கோசிகனுக்கு, கண்களும் சிவந்தன. எட்டுத் திசையும் இருள் சூழலாயிற்று.

'' இவ்விதம் கோபமுற்ற விச்வாமித்திரனது கருத்தைஉணர்ந்த வசிட்டன் ''நீ பொறுத்துக் கொள்'' என்று அவனுக்குச் செப்பித் தயரதனைப் பார்த்து, 'நின் மகனுக்குத் தீதன்றி நலம் வருவதற்கு இருக்கின்ற காலத்தைத் தடுக்கலாமோ'' என்று''பெய்கின்ற மழையினால் பெருகுகின்ற வெள்ளம் அலை அடர்ந்த கடலிற்குப் போய் விரைவதுபோல், ஐய, நின் மகனிற்கு அளவற்ற வித்தைகள் வந்து எய்துகின்ற காலம் இன்றைக்கெதிர்ந்துளது'' என இயம்பினான்.

'' அரசன் தன் குருவினது வார்த்தையைக் கொண்டு, 'திருமகள் தலைவனைப் போய் அழைத்து வாருங்கள்' என்று அருகிருந்தோர்க்குச்சொல்ல அவர், 'நின் தந்தை வா' என்றனன் என்று அழைக்கவே அவ்வறிவிற் சிறந்தவன் வந்து சேர்ந்தனன்.

'' வந்த நம்பியை அவன் தம்பியோடு கூட மறைவல்ல முனிவனுக்குக் காட்டி, '' இவர்களுக்கு நல்ல தந்தையும் நீ ஒப்பற்ற தாயும்நீ, எந்தை கொடுத்தேன், வேண்டுவன செய்துகொள் '' என்றான் தயரதன்.

T. N. சேஷாசலம்.

---

## சொல்லாட்டம்.

சென்ற வாரம் (21-6-1928) வந்த சொல்லாட்டம் 2 வதில் கேட்ட கேள்விகளுக்கு விடை பின் வருவன :—

(1) ஆகாரம். (2) கல்வி. (3) அகலம். 4) கழுதை. (5) கடல். (6) சந்தனம் (7) மகரம். (8) முதலை. (9) காடி. (10) குஞ்சரம்.



# அகத்திய முனிவர்.

அளவிலாற்றலுடைய முனிவர் பெருமானும் அவர் வேண்டுகோட்படி தன் தவ வலியால் கடல் நீரைத் திரட்டிக் குடித்தருளினார். பிறகு இந்திரன் விருத்திரனைக்கண்டு கொன்ற பிறகு முனிவரிடம் வந்து பண்டு போலக் கடலில் நீர் நிறைத்தருள வேண்டுமென்றுவேண்டிக்கொள்ள அவ்வண்ணமே மீண்டும் உண்ட கடலை உமிழ்ந்தருளினார். என்பது ;

'' ஊற்றெழு பரவைத் தெண்ணீர்
உழுந்தள வாக்கி யுண்ணும்
ஆற்றலி னெடியோ னாகி
அளவினிற் குறிய னாகி
நீற்றணி முனிவர் கோன் ''

என்ற தொடக்கத்த மேற்கோள்களினால் நன்கறியலாகும். அருந்தவர்க் காகாத தொன்றுண்டோ?

தென்திசைக்கு வந்த ஆரியருள் இவருக்கு முன்னொருவருமில்லை யென்பது முன்பு கூறப்பட்டுளது. இவர் திபெத்திலிருந்து வந்தாரென்று மேனாட்டாசிரியரொருவர் கூறியுள்ளார். பிறரதனை மறந்துமிருக்கின்றனர். தற்போது அடியில் வருமாறு கருதவுமிடமிருக்கின்றது.

வட அமெரிக்காவின் வடபாகத்தில் எஸ்கிமோ என்னும் ஓர் ஜாதியருளர். அவர்களில் மிக்க உயரமுள்ளவர் ஐந்தடிக்கு மேற்பட்டவரில்லை. அவர்களை அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவரென்று சிலர் கூறுகின்றனர். ஆயினும் அவர்கள் பெரும்பாலும் சீனதேசத்தவரைப் போலக் குறுகிய கண்களுடையவரா யிருப்பதால் அந்நாட்டவரா யிருக்கலா மென்கின்றனர். அகஸ்தியர் உருவத்திலும் பெயரிலும் ஒருவாறு ஒத்திருத்தல்பற்றி இந்த எஸ்கிமோ வகுப்பைச் சேர்ந்தவரா யிருக்கலாமோ வென்ற ஐயமேற்படுகின்றது. ஆயின் அங்கிருந்து புறப்பட்டுச் சைனாவிற்கும் ரஷியாவிற்கும் மத்தியிலிருக்கின்றதும், பதினாலாயிரமடி உயரமுள்ளதும், ஏராளமாகப் பொன் வெள்ளி முதலிய உலோகங்கள் எடுக்கப்படுதல் பற்றிப் பொன்மலை மேருமலை யென்று சொல்லப்படுகிறதுமான ஆல்டாய் மலையில் வந்து தங்கிப் பிறகு தென்பால் வந்தனர் எனச்சொல்லின் பொருந்துமென்க. நிற்க,

'' ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் '' என்ற தொடக்கத்தச் சங்க இலக்கிய ஆதாரப்படி இமையமலையில் ஆரியரிருந்தனரென அறியலாகின்றது. அகத்திய முனிவர் அங்கிருந்து தென்திசைக்கு வந்தனரென்று வைத்துக்கொள்வது நலமாகும். அதற்கப்பாற் சென்றாற் பல எதிரடைகளேற்படுகின்றவன்றி நிலையுமேற்படவில்லை.

புராணங்கள் 'இவர் மேருமலையிலிருந்து வந்தா'ரென்று கூறுகின்றன. இவர் அங்கிருந்து வரக்காரணமும் அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது. சிவபிரான் பார்வதி தேவியாரைத் திருமணஞ் செய்வதைத் தரிசிக்கத் தேவர் முனிவர் முதலிய அனைவரும் மேருமலையில் ஒருங்கு கூடினர். அதனாற் பரந்த பாரம் மேருமலையில் ஒன்று சேர்ந்தமையின் பூமியின் வடகோடி தாழ்ந்து தென்கோடி யுயரலாயிற்று. அதுகண்ட தேவர் முதலியோர் வெருவிச் சிவபிரானிடம் புகல் புரிந்தனர். சிவபிரானும் உடனே அதன் காரணத்தைக்கூறி, 'என் போன்ற ஒருவன் தென்திசைக்குச் சென்றிருப்பானாயின் முன்போற் பூமி சரிபாரம் பெற்றுச் சமநிலையடையும்-அதற்குரியவரும் அகத்தியமுனிவரே யாவர்' என்றுங் கூறினர். அதுகேட்ட வானவரும் அகத்திய முனிவரிடம் வந்து குறையிரந்து வேண்டிக்கொண்டனர். சிவபெருமானும் தன் மணக்கோலத்தை அங்குவந்து காட்சிதருவதாகத் தன் பிரிவாற்றாது வருந்தும் அகத்திய முனிவருக்கு வாக்களித்தார். விரிவு கந்தபுராணத்திற் காணத்தக்கது.

காஞ்சிப் புராணத்தில் 'மேருமலை முழையில் தவஞ் செய்துகொண் டிருந்த முனிவர், தேவர் வேண்டுகோட்படி விந்தியத்தையடக்கிக் காஞ்சிமா நகரில் வந்து அகத்தீசரென்னு மோர் இலிங்கம் ஸ்தாபித்துப் பூசைசெய்து வந்தார்; பிறகு மேருத்தாழப் பொதிகைக்கு வந்தார்' என்றுகூறப்பட்டுள்ளது. இதன் விரிவைக் காஞ்சிபுராணத்திற்காண்க.

'' மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்''

என்றும்;

'' மூசரவு சூடுமுத லோனுரையின் மூவா
மாசில்தவ வேகொனவ டாதுதிசை மேனான்
நீசமுற வானினெடு மாமலைய நேரா
ஈசனிக ராயுலகு சீர்பெறவி ருந்தான்''

என்றும், பிறவாற்றானும் அகத்திய முனிவர் ஒருவாறு தேறித் தென்திசைப் பொதியத்திற்குப்போக வுடன்பட்டார். பிறகு முனிவர் சிவபிரானிடம் 'தேவரீரை ஆராதிக்கத் தடாகங்களிலும் குளங்களிலும் நீர் குறைவற்றிருப்பதற்கு ஓர்தீர்த்தந்தருளவேண்டுமென்று கேட்டனர். அதற்குச் சிவபெருமான் திருக்கைலாய மலையிலிருந்து எழு நதிகளில் காவேரிநதியை வரவழைத்து 'இதைக் கமண்டலத்தி லேற்றுக்கொள்க; பிறகு இஃதாங்கோர் நதியாகப்பெருகும்' என்றுகூறினர். உடனே அதையு மேற்றுக்கொண்டு

'' குமிழ்மறி விழியாள் பாகன்
அருளினாற் கொழிக்கு மின்பத்
தமிழ்மொழிப் பாடை யொன்று
தரைமிசை விளங்க .''

பரமசிவனை நோக்கி '' சுவாமி தென்தேசத்தில் வழங்கும் பாஷை அடியனேற்குத் தெரியாதே! ஆதலால் அதையு முபதேசித்தருள வேண்டுமென்று கேட்க அவ்வாறே அதையும் உபதேசித்தருளினர். இன்னது காஞ்சிபுராணக்கூற்றாகும். பிறகு ஜமதக்கினி முனிவர் குமாரர் திரணதுபாக்கினியையுங் கொடுத்தருளினர். வடமொழிவல்ல அகத்தியர் அவரையும் பெற்றுக் கொண்டு தெற்கு நோக்கித்திரும்பினர். இதுபற்றியே அகத்திய முனிவரை''உயர்சென்னித் துண்ட மதிவைத்தவனை யொத்தமுனி'' ''ஈசனிகர்முனி '' என ஆன்றோர் கூறினர். மற்றோர் விதங் கூறுமாறு.

முற்காலம் காசிமாநகரில் முனிவர்பலருங் கூடி வடமொழியை அபிவிருத்திசெய்யச் சங்கமேற்படுத்தி நடாத்திவந்தனர். அச்சங்கத்துள் அகத்தியருமோர் அங்கத்தினராவர். இவர் அடிக்கடி ஓயாது அவர்களுடன் வாதிட்ட காரணத்தாற் பிரிந்தனர். பிறகு அவர்களின் இறுமாப்பை ஒழிக்கக் கைலாயஞ்சென்று சிவபெருமானிடம் வேண்டி நிற்புழி, அவ்வழித் திவ்வியதோர் பரிமளங் கமழ்ந்தது. முனிவர் அதுவந்தவழியையறியவெண்ணிப் பரமசிவனை நோக்கி ''சுவாமி! இப்புது மணம்வருமா றெங்ஙன'' மென்றார். சிவபிரான் ஆங்கோர் மூலையில் குவியுண்டுகிடந்த சிவபத்திரங்களைக் காட்ட அவற்றைக் காண்டலும் 'தமிழ் தமிழ்.' என்னும் இனிய பெயரைச் சொன்னார். உடனே பெருமானார் அப்பாஷைக்கு ஆதாரவிதிகள் இவ்வேட்டுப் பிரதிகளிலுள்ளன வென்றெடுத்துக்கொடுத்து உபதேசித்தருளினர். பிறகு முனிவர் தக்ஷணத்திலுள்ள பொதிகைக்கு வந்து வசித்துக்கொண்டு பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னும் நூற்கள் இயற்றித் தம் மாணாக்கர் பன்னிருவருக்கும் கற்பித்துத் தழைத்தோங்கச் செய்தனர். எவ்வாறு தமிழ் வந்த போதிலும்,

'' ஆதியின் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகன் ''

என்ற தொடக்கத்தனவைகளால் முதலில் அகத்திய முனிவர் சிவபெருமானிட மிருந்துதான் உபதேசம், பெற்றனரென்க. முன் சிவபெருமானிடமிருந்தே திரணதூமாக்கினியாரையும் காவிரியாறையும் வாங்கிக் கொண்டனர் முனிவரெனக் கூறுவதை எழுதினோம். நச்சினார்க்கினியர் '' கங்கையாருழைச்சென்று காவிரியாறையும் ஜமதக்கினியா ருழைச்சென்று திரதூமாக்கினியாரையும் வாங்கிக்கொண்டு சென்றனர் '' என்று கூறுகின்றனர். அடியார்க்கு நல்லார், '' காவிரிநீர்

கங்கை நீராதலிற் கங்கைப் புதல்வரைக் காவிரிப்புதல்வ ரென்றார்" என்று கூறுகின்றார். சிவபிரான் கட்டளைப் படி சென்று வாங்கிக்கொண்டதும் சிவபிரான் கொடுத் தவையே யாகுமென வைத்துக்கொண்டால் முரண் பாடின்றாம்.

அருந்தவக் கிழவன் தென்றிசைக்கு வரும்போதும் பல அரசர்களையு முடனழைத்துக்கொண்டு வந்தனன். நச்சினார்க்கினியர் "துவராபதியுட்சென்று நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் மரபினரான பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் உடனழைத் துக்கொண்டு தென்றிசைக்கு வந்து காடுகெடுத்து நாடாக்கி அம்மன்னர்களுக்கு வழங்கிவிட்டுப் பொதிகை யில் வந்திருந்தனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

> "சுராதி ராஜன் முதலாகவரு சோழனுமுனட்
> சோழமண்டல மமைத்த பிறகு"

என்றமேற்கோளாலும் பிறவுற்றாலும் அகத்தியருடன் வந்த அரசிளங்குமாரரே சேர சோழ பாண்டிய மண் டலங்களை யமைத்தவர்கள் என்பது விளங்கும். அதற்கு முன்னால் இந்நாட்டில் பல குறுநிலமன்னர்களாண்ட னர். வடநாட்டிலிருந்து வந்தவர்களே தென்னாட்டைத் திருத்திப் பலவகையாலும் விருத்தி செய்தார்களென் பது பொருந்தும். எங்ஙனமாயினும்

> "செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்"

என்றபடி இவர் செய்த செய்கைகள் சாமானியமல்ல.

அகத்திய முனிவர் தென்றிசைக்கு வரும் வழியில் தாரகாசுரனது பரிவாரங்களிலொருவனான கிரௌஞ்ச னென்னு மரக்கன் முனிவருக்குமுன் மலையுருக்கொண்டு நின்றான் முனிவர் பிரானும் அது உண்மை மலையென் றுகடந்து செல்ல அதில் ஏறினர். இவர்போகும்போது அரக்கன் சூழ்ச்சியால் மாயக்கவர் வழிகள் சென்று கொண்டேயிருந்தன. முனிவரும் இவ்வழியாகச் சுற்றித் திரிந்து நேர்வழிகாணுமல் தயங்கிக்களைத்தனர். பிறகு இஃதென்னை கொலென்று ஐயுற்று ஞானதிருஷ்டி யால் நோக்கி அரக்கனின் மாயமென்றறிந்து அவனை மலையாகுமாறே சபித்தனர். பிறகு அம்மலை அவ்வரக்கன் பெயரால் 'கிரௌஞ்சகிரி' என்று வழங்கலாயிற்று.

அகத்திய முனிவர் வழிதப்பி வருந்தியதற்கு வேறொரு காரணங்கற்பித்து வழங்கப்பட்டு வருகின்றது. அதா வது; முனிவர் பிரான் மலையின் பக்கமாக வரும்போது விநாயகர் பிரம்மசாரி யுருக்கொண்டு அவர் முன் வந்தார். முனிவரும் அப்பிரமசாரியிடம் வழிகேட்டார். பிரம சாரியும் வழிகாட்டுவதாக முனிவரை யலைத்து நேர்வழி காட்டாமல் வருத்த, முனிவர் அவனை வெகுண்டார். பிரமசாரியு மோட்டமெடுத்தான். முனிவரும் பின் தொடர்ந்து அவனைப்பிடித்துத் தலையிற்குட்டி, இருகை களாலும் மாறி இரு காதுகளையும் பிடிக்கச்செய்து முட்டு மடித்திருந் தெழுந்திருக்கச் செய்துகொண்டிருக் கும்போது விநாயகர் தன் நிஜரூபத்தைக் காட்டித் தான் செய்த தண்டத்தைத் தன்முன்பு செய்தவர்க்கருள் புரிவ தாகச் சொல்லியருளி மறைந்தனர், என்பதாம். அப் பால் தென்றிசை நோக்கிச் செல்லலாயினர்.

நாரத முனிவரின் சூழ்ச்சியால் விந்தியமலை மேருமலை யோடு மாறுகொண்டு ஆகாயமளாவி உயர்ந்ததால் சூரிய சந்திரர் கதிக்குத் தடையேற்பட்டது. அப்பொழுது தேவர் வேண்டுகோளை மேற்கொண்ட முனிவர் சிவ பெருமானருளா லருகில்வந்து பெருமானை மனதில் தியானித்து அலைகடல் செறித்த வங்கையைத் தன் தவ பலத்தாலுயர்த்தி அதன் மீதுவைத் தழுத்தவே அம்மலை தாங்காமல் பூமியில் தாழ்ந்தது. அன்றி;

> "யோகமுறு பேருயிர்கள் தாமுலைவு றாமல்
> ஏகுநெறி யாதென மிதித்தடியி னேறி
> மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய்
> நாகமது நாகமுற நாகமென வந்தான்"

என்றபடி அவர்கள் வேண்டுகோளால் முனிவர் அம்மலை யின்மேல் யோகபலத்தால் மிதித்தேறத் தாங்காமல் விச்சை தேர் முனிவரைக்கண்ட விந்தியமலை குனிந்து வணங்கியது. அப்பொழுது முனிவர்தான் தென்றிசைச் சென்று மீண்டு வருங்காறு மிவ்வாறிருக்கவெனப் பணித்துச் சென்றனர்.' என்றும் திரித்துக்கூறுவர். இதுபற்றியே இவருக்கு விந்தியாகூடர் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

சரித்திரத்திற்கியைத்துப் பொருள் கொண்டால், வடநாடு பிரிப்பதற்கு வரம்பாயிருக்கிற விந்தியமலையில் முதலில் வழி கண்டுபிடித்து வடக்கிருந்து தென்பால் வந்தவர் அகத்திய முனிவரைத் தவிர வேறில்லை; அவ் வாறு விந்தியமலையில் வருந்தி வழி கண்டுபிடித்ததை விந்தியத்தை யடக்கியதாகப் புராணாசிரியர் கற்பித்தனர்; எனக் கொள்ளவேண்டும். கடல்குடித்த கதையும் இங் ஙனமே கொள்ளத்தக்கது. ஆண்டுக் காட்டுதும்.

முனிவர் விந்தியத்தில்நின்றுங் குடநாட்டிற்குப் போகும்போது சூரபன்மனுக்குத் தங்கையான அஜமுகி துர்வாசமுனிவரை வலிந்தழைத்துச் சேர்ந்துபெற்ற மக்களான வாதாபி வில்வலர்க ளிருக்குமிடம் வழியாகப் போனார். இவர்கள் தந்தையிடம் செய்த தவம் முழு வதையும் தந்தருள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட் டதால் அவர் வெகுண்டு அவர்கள் விரைவிலழியவேண்டி "நாடோறும் முனிவர்களுக்கு இடையூறுசெய்து திரி யக்கடவீர்" என்று சபித்தனர்.

பிறகு அவர்கள் பிரமதேவரை நோக்கிக் கடுந்தவஞ் செய்தும் அவர் வாராததால் வில்வலன் தன் தம்பியாகிய வாதாபியைத் துண்டுதுண்டாக வெட்டி ஓமஞ்செய் தான். அதன்பின் நான்முகன் பிரத்தியக்ஷமாய் 'வேண்டு வதி யாதெனக்கேட்க' வில்வலன் தன் தம்பி எழுந் திருக்க வேண்டுமெனக் கேட்டதுமன்றி, 'என் தம்பி வெட்டுண்ட காலத்து யான் கூவியழைத்தால் உடனே உயிர்பெற்று வரவேண்டும்' என்று கேட்க வேதனும் அங்ஙனமே யாகுகவென் றருளினர்.

அன்றுமுத லவ்விருவரும் முனிவர்களைக் கொன்று தின்னத் தலைப்பட்டனர். வில்வலன் முனிவர் வேடம் புனைந்து பல முனிவர்களை விருந்துக்கென்றும் நிமித் தாணத்துக்கென்றும் அழைத்துவந்து வாதாபியை ஆடாக்கி வெட்டிக் கறி சமைத்துப் படைப்பான். முனி வர்கள் அதைப் புசித்தெழுந்து போகும்போது 'வாதாபீ' என்றழைப்பான். அவன் முனிவர்களின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வந்துவிடுவான். பிறகு அவ்விருவ ரும் முனிவர்களைத் தின்பார்கள்.

இவ்வழக்கத்தையவர்கள் அகத்தியமுனிவர் பாலும் செலுத்தினர். சொல்வல முனிவரஃதுணர்ந்து 'வதாபி ஜீர்ணோத்பவ' என்று சொல்லி வயிற்றைத் தடவவும் வாதாபி தகித்துப் போனான். இதை யறிந்த வில்வலன் நிஜரூபியாய்த் தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டு இம்முனிவரைக்கொல்ல வந்தான். அகத்திய முனிவர் தனுர் வேதத்தில் மிக்க தேர்ச்சியுடையவராதலால் ஒரு தருப்பைப் புல்லையெடுத்துச் சிவபடைக்கலமாக மந்தி ரித்து அவன்மேல் விட்டார். அது சென்றவனை மாய்த்து வீழ்த்தியது. இவ்விபரம்;

> "மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மை
> காயமினி துண்டுலகி னாரிடர் களைந்தான்"

என்பதாலும் பிறவும் புராணங்களாலும்புலப்படுகின்றது. பிறகு;

> "தன்துணைக் கிழத்தியோடும்
> சையமால் வரையைச் சார்ந்தான்"

என்கிறபடி கொங்குதேசஞ் சென்று இவர்களைக் கொன்ற பாவம் நீரும்பொருட்டுச் சிவபிரானை யாரா தித்துவந்தார் என்று கந்தபுராணத்திற் கூறப்பட் டுள்ளது.

(தொடரும்) R. முத்தையர்.



# அரவிந்த கோஷ்

By

## கவி இரவீந்திரநாத தாகோர்.

(Special for Kalanilayam)

வெகுகாலமாக அரவிந்தகோஷைச் சந்திக்கவேண்டும் என்று நான் கொண்டிருந்தவோர் ஆசை இப்பொழுது நிறைவேறியது. அதுபற்றி என்கருத்தில் தோன்றிய எண்ணங்களை எழுதிவைக்க வேண்டுமென்னும் ஓர் உணர்ச்சி எனக்கு உண்டாகிறது:—

"ஆதியில் இருந்தது ஒரு சொல்" எனக் கிறிஸ்தவ வேதம் கூறும். இந்தச்சொல் சிருஷ்டியில் உருவம் பெறு கின்றது. புதிய ஆண்டினைப் பிறப்பிப்பது பஞ்சாங்க மன்று. உயரிய காட்சியெய்திச் சத்தியச் செல்வத்தில் விளங்கும் நெறியூடு மனிதரை நடத்திச் செல்வது அவ் வொரு சொல்லேயாகும்.

ஆதியும் அந்தமும் நம் வேதத்தின் மகாவாக்கியங்க ளெல்லாம் ஓம் என்ற வொருசொல் ஓதியே தொடங்கி முடிகின்றன. வாய்மையின் சுய ஸம்மதத்தைக் குறிக் கின்ற கருத்துடையது அது. என்றுமுள சாச்வதத்தின் பிராணன் அதுவேயாகும்.

கருத்தெனும் பெருங்கடலினின்று அலையொன்று எழுந்து தன் சிகரத்தில் பிரஞ்சுப் புரட்சியை (The French Revolution)ஏந்தியதாய் ஆரவாரத்துடன் ஐரோப் பாவின் மீது பாய்ந்த அன்று புதிய ஆண்டொன்று பிறந் தது. பிராஞ்சுதேசத்தில் அக்காலத்தில் மெலிந்தோர், தம்மை நலிந்தோர்க்கு எதிராக இகலி நின்றதாலல்ல அவ் வாண்டு புதியது ஆயது. மற்று எதனால் எனின், மானுட ரினைவர்க்கும் ஒருபெரும் தருமநெறி விடுதலையை அந்தச் சொல் அக்காலத்தில் பேசியதாற்றான்.

மஸினியும், கிரபால்டியும் இதாலியா தேசத்தில் ஓர் புதிய உணர்வை உயிர்ப்பித் தெழுப்பி அழைத்தது, அத் தேயத்தின் அரசியல் புறநிலை மாற்ற மடைந்த விஷயத் தாலன்று. மற்று, அதற்குக் காரணம், சாதாரண ஆசாரகரு மங்களை விதிப்பது மாத்திரமன்றி, உள்ளத்தில் சிருஷ்டி வாய்மையின் உணர்ச்சி ஊக்கத்தைப் பிறப்பிக்கும் அச் சொல்லை உச்சரித்ததே யாகும். எனக்கு அயலில் இருக் கும் வஸ்துக்களை இருட்டில் நான் சேர்த்துக் கொள்வ தற்கு உதவுகின்ற ஸ்பரிசஉணர்வு, எனக்குப் பிரத்தியேக மாய் உரியது. ஆனால் சூரியனது ஒளி இப் பிரபஞ்சத் தின் உயரிய உண்மையின் பிரதிநிதியாம். எனது நினது என்று பிரிந்திருக்கும் தனிநிலையிலுள்ள யாருடைய குறைகளையும் கடந்து அப்பாலாய், மன்பதைத் தொகுதி யில் எல்லாருக்கும் ஒருங்கே வேண்டியதா யிருப்பது அக் கதிரவன் பிரகாசம். இந்த வொளி அச்சொல்லின் உண் மையான அடையாளம்.

ஐரோப்பா முதலிய மேலைத்தேசங்களிலே பூதசாஸ்தி ரம்(Science) புதிய ஆண்டினைப் பிரவேசம் செய்வித் தது. அதுவும், பிரகிருதியின் இரகசியங்களை மனிதன் புகுந்தாராயப் பிரயோஜனமாவதுபற்றி அல்ல. எல்லா விஷயங்களையும் தன்னுளமைய முன்னெடுத்துக் காட் டித் தானே அநாதியாய்ப் பின்நிற்கும்மெய்ம்மையின் பிர பஞ்ச மயமான தோற்றத்தை மனிதருக்குத் தோற்றித் தந்ததாலும், சித்திரவதையையும் சாவையுமே ஒருபொரு ளாக மதியாது மீறிச் சத்தியத்திலவர்க்குள்ள சிறந்த பக் தியை எழுப்பிவிட்டதாலும் பூதசாஸ்திரம் புதிய ஆண் டைப்பிரவேசிக்கச் செய்ததென்று அறிகின்றோம். இந்தச் சாஸ்திரம், விஷயங்களைக் கடந்து, சிருஷ்டியின் மூலச் சொல் முழுங்குகின்ற அச்சோதியின் கூடமாய கருப்பக் கிருகத்திற்கு அழைத்தேகுகின்ற காலையில், வாஸ்தவத் திலே அது நம்மை வேறோர் ஆண்டினது தலைவாயில் கொண்டு வந்து விட்டதென்று, இக்காலச் சாஸ்திர வளர்ச்சியைத் தொடர்ந்து வருபவரனைவரும் அறிவார்.

பண்டைநாள் இந்தியாவில், கிரியாஅநுஷ்டானங்களி லிருந்து பரமார்த்த ஞானத்திற்கு மாறியபோது சிருஷ்டி காலமும் தொடங்கியது. தன்னின் பரிபூரணத்தினின்று சிருஷ்டிபுரிகின்ற ஆன்மாவை யதுகூப்பிட்டழைக்கவே, மனிதர் கண்விழித்து, "நித்தியத்துவத்தின் ஹிருதயத் தில் வாழ்கின்றவர்களே வாய்மையாக வாழ்கின்ற வாரவர்," என்று விளம்பினர். ஆதலின் அக்காலத்தின் ஹிருதயத்தினின்று பேசிய சொல் யாதெனில், "ஒரு தனி மெய்ப்பொருளை அநுபவசாத்தியமாக்கிக்கொண் டவர்களே நிரந்தரநிலையினை எய்தியவ ராகின்றனர்" என்னும் இதுவேயாம்.

புத்தமத காலத்திலும் கூட, அலகிலாத்தன்மையாய அன்பினது பூரண தியாகமெனும் வதந்தியுடன் அச் சொல் வந்து தோன்றியது. தோன்றி, மனிதனது நீதி தர்மத்தன்மையில் முற்றிய தூய்மையை இலக்ஷியமாகக் கொண்ட உணர்ச்சியை உதிக்க வைக்கவே, அது அடி மைநீங்கி விடுதலையுற்ற சித்தத்தால் அவனுக்கென்று ஓர் உலகத்தைச் சிருஷ்டி செய்ய முயல்வதாயிற்று.

மனிதனுக்குள் அறியமாட்டாதிருக்கும் அகண்டத் தைத் தெரியும்படி தோற்றுவிக்க உதவுவது இச்சொல். அன்றன்று உயிரிற்கு வேண்டிய ஊதியத்தைச் சம்பா திப்பதோடு தம்முயற்சி நின்று விடும்படி பிரகிருதி மிரு கங்களைக் கட்டாயப்படுத்துகின்றது. இவ்வித ஜீவனம் என்னும் குறுகிய வேலையினின்று மனிதரை விடுவித்து அகன்றவோர் வாழ்வாகிய சுதந்தரத்தை எய்துவித்தது இச்சொல்லேயாகும். சரீரத்தின் சுயபாதுகாப்பிற்கியன்ற உலகத்திற் காணும் மங்கிய வெளிச்சம் இரவின் உலகத் திற்கே ஏற்றது; மனிதரோ இரவில் திரியும் சந்துக்க ளல்லர்.

தன் பெருமையைத் தானே நம்புவதற்கு ஆதாரமாய சாக்ஷிகளை மனிதன் அப்போதைக் கப்போது புதிது புதிதாய்க் கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும். இந்த நம் பிக்கை அவனுக்கு ஆதியந்த மற்றதாய் அளவிறந்து இருக்கும் ஒருதத்துவத்தில் விடுதலை அளிக்கின்றது. குற் றம் குறைவற்று நிறைவாழ்வெனும் ஆகாசத்தூடு ஆன்ம ஜோதி தடையின்றித் தென்படக்கூடிய மனிதனொருவ னைக் காணுந்தோறும், அவ்வக்காலத்தில் இத்தத்துவ நம்பிக்கை தேர்ந்துணரப் படுவதாகும். அவன் யாவனெ னின், தர்க்க நுட்பம் வாய்ந்த புத்திவன்மை பெற்றவ னல்லன், கருமம் பல சாதிக்கும் சக்தியுடையவனல்லன், மற்று, எவனது வாழ்நாள் அச் சொல்லினோடு ஒன்றாகிக் கலந்துவிட்டதோ, என்றுமுள உடன்பாட்டின் சம்மத மாய ஓம் என்பது எவனது உருவமே உயிர்க்கின்ற தோ, அவனே அம் மனிதனுவான்.

நம்மைச் சுற்றிலு முள்ள மனிதரிலோ இதற்கு மாறாகத், தம்மிடத்தில் தாமே நம்பிக்கையற் றிருக் கின்ற ஓர் நிலையையே காண்கின்றோம். ஆன்ம சூன்ய நிலை இந்நிலை. மனிதன் தன் வாழ்நாள் முடியும்

வரையிலும் திருந்திப் பண்படா மிருகமாகவே இருக்க வேண்டு மென்றும், சந்தைக் கடையில் பயில்கின்றபடி பொருளுக்கேற்றவிலையென்னும் அளவையைக்கொண்டு நமது இலக்ஷியங்களின் பண்பின் தரத்தை மதித்திட வேண்டு மென்றும், விபரீத வாதத்தை ஸ்தாபிக்கின்ற ஓர் மானமற்ற இறுமாப்பை இக் கிலை மனிதரில் விளை விக்கின்றது. இவைகளைக் காணுங்கால் பின்னும் பலப் படுகின்றது முன் சொன்ன உத்தம புருஷனைச் சந்திக்க வேண்டும் எனும் விருப்பம்.

எனக்கு எனக்கென்று சமயத்தைக் கைப்பற்ற வெறி யுற்றுப் போட்டியிட்டுப் பதைபதைத்துப் பிடுங்கிப் பெற்ற இலாபசாபல்யமே தம் நோக்கமாக வுடைய லங்கல்பங்களை முன்வைத்துச் சத்தியத்தை எப்பொழு தும் பின்தள்ளும் இற்றைநாள், நமது பேராசை கட்டுக் கடங்காத தாகின்றது. பொறுமையற்ற அவசரத்தால் அது, கிரமமாக ஒன்றைச் செய்தடையும் முறையினூடு இயற்கையாயமைந்த தான லயத்திற்குத் தன்சுருதியைக் கூட்டி இசைக்க மறுப்பதாகி, தலை கால் தெரியாத வேகத்திற்குரிய கருவிகளை யெல்லாம் பிரயோசனப் படுத்திப் பார்க்க விரைகின்றது. அத்தகைய கருவிகளில் பொய்யை மெய்யென மயங்கச் செய்யும் 'பிரசாரங்களும்' ஒன்று. பேராசையானது, தான் படர்கின்ற பாதையின் முடிவில் கினைத்த லாபம் பெறுவதற் கிருப்பதாதலால் தன் பாதையைச் சுருக்கிக் குறுக்க முயல்கின்றது. சத் தியமோ, காம்பொடு கலந்த மலரெனத் தன்னை வாஸ் தவமாக நாடுகின்ற நாட்டத்தினூடேயே உருவியுறை கின்றதாகும். ஆனால், காதலால் அனாவனாவும் தன் மையை அகற்றி அச்சத்திய தேவதையை யாதாவதோர் பிரயோஜனத்தைச் சுமந்து வருகின்ற வாகனமாக உப யோகப் படுத்துவதாயின், அவன் பிரயோஜனம் எனு மப் போலித் தோற்றத்தை மோசமென விட்டகன்று போகின்றான்.

இராமாயணப் பெருங்காவியத்தின் தலைவனாகிய ஸ்ரீ-இராமச்சந்திரன், காடடைந்து நெடுநாள் திரிந்தபோது, அன்றன்றுற்ற துன்பமும் வறுமையுமே உதவிசெய்யத் தன்னொடு நாடுதுறந்துவந்த கட்புடை மனைவி சீதை யின் பக்தியுறுதியை உய்த்துணரலாயினன். என்றென் றும் முதிர்கின்ற அநுபவமெனும் தாளாண்மையோடு அந்நியோந்யமாய்த் தழுவியுள்ள மார்க்கத்தால் அவளைப் பெற்றடைவதற்கு அதுவே சிறந்த சாதனமாகும். தனது இராஜ்யத்திற்கு மீண்டபிறகு, தத்கால அரசிய லவசியம் தூண்டவே, அவன், சங்கையுற்றுச் சூழ்ந்திருந்த சனங் களுக்கு முன்னிலையில் அக்கினிச் சோதனை என்ற இந் திரசாலச் சாக்ஷியொன்றால் அவளது சத்தியத்தை ஸ்தா பிக்கக் கேட்டான். இந்தச் சோதனை உணர்ச்சியற்ற பொய்யாதலால் மெய்ம்மைக் கோர் குற்றமாகு மென் றறிந்த சீதை அதனை மறுத்து மீளாவகை அகன்று போயினா ளன்றோ.

(தொடரும்)

# பழமுதிர்சோலை.

## பசிப்பேய்.

பசிபசியென்று தம் வயிறறைந்து வாதாடுவார் என்றும் எற்றமிலர். பசியினும் கேளார் விழுமியோர். பசியென முறையிடுதற் குரியவர் உயர்திணையில் பேய்களே யாவர். பசிக்குறையன்றி மற்றெக்குறையும் போக்குதற்கெண்ணி ஓரினத்தாராதல்ஒருதொழிலாராதல் கூட்டங்கூடிஓயாது இக்காள் சிலவிடங்களில் ஓலமிடுமிவ்வவல கிலையை எதி ரது தழுவியோ ஆயிரமாண்டுகளுக்கு முன் ஜயங்கொண் டார் தம் கலிங்கத்துப்பரணியுள் பேய் முறைப்பாடு பாடினர்.

சோணாட்டுச் சக்கிரவர்த்தியாய் விஜயதரன் வைகிய காலில், அங்குள காட்டுப் பேய்கள் கூட்டங்கூடித் தின் பதற்கு வேண்டிய பிணம் கிடைக்காது பாழ்த்த தம்வாழ் க்கையைத் வெறுத்துத் தம்தலைவியாய துர்க்கையினிடத் தில் முறையிடுகின்ற சொற்களை இன்று எம்மோடு நண் பர்காள், ஓதவருமின். ஓதுவது எம்மோடாயினும், அதற் கும் இக்கால முறைப்பாடுகளுக்கும் இருக்கின்ற ஒற்று மையை நீவிரே பொருத்திக் கொள்மின். எம்முதவி வேண்டா.

சொல்கின்றன இச்சோணாட்டுப் பேய்கள் :—

"ஆறுடைய திருமுடியா னருளுடைய
பெருந்தேவி யபயன் காக்கும்
பேறுடைய பூதமாப் பிறவாமல்
பேய்களாய்ப் பிறந்து கெட்டேம்.
ஆர்காப்ப ரெங்களைநீ யறிந்தருளிக்
காவாயே லடையப் பாழ்த்த
வூர்காக்க மதில்வேண்டா வுயிர்பாழ்த்த
வுடம்பினைவிட் டோடிப் போதும்.
வேகைக்கு விறகானே மேலியா கின்றே
மெலிந்தவுட றடிப்பதற்கு விரகுங் காணேம்
சாகைக்கித் தனையாசை போதும் பாழிற்
சாக்காடு மரிதாகத் தந்து வைத்தாய்.
சாவத்தான் பெறுதுமோ சதுமுகன்றன்
கீழ்நாங்கள் மேனாட் செய்த
பாவத்தா லெம்வயிற்றிற் பசியை வைத்தான்
பசிக்கல்லே மெங்கட் கல்லேம்.
பதடிகள்போற் காற்றடிக்கப் பறக்கின்றேம்
பசிக்கலந்து பாதி நாக்கும்
உதடுகளிற் பாதியுந்தின் றொருவாயேம்
அடியேமை யுய்யப் பாராய்.
மூக்கருகே வழுநாறி முடைநாறி
யுதடுகளுந் துடிப்ப வாயை
ஈக்கதுவுங் குறியாலுயர் திருக்கின்றே
மன்றாகி லின்றே சாதும்."

[கங்கையைச் சடையில் தரித்த சிவபிரானது அரு மைத் தேவியே. இச் சோழமன்னனால் காக்கப் பெறும் பாக்கியஞ் செய்த உயிர்களாகப் பிறவாமல் பேய் களாய்ப் பிறந்ததால் கெட்டுப்போனோம். எங்களுடைய குறைகளை அறிந்து நீ காவாது விட்டால் எங்களைக் காப் பதற்கு வேறு யாருளர். பாழடைந்த ஊரைக் காப்ப தற்கு ஓர் மதில் வேண்டுவதில்லை. இனி உயிர்பாத்த நாங்கள் இப்பேயுடலை விட்டோடிப் போகின் றோம். பசித்தீயினால் எரிந்து போவதற்கு ஏற்ற விறகுபோலாகி மெலிந்துபோயினோம். மெலிந்த உடல் மறுபடி தடிப்பதற்கு ஒரு வழியும் தெரியவில்லை. எங் களுக்கு இனிச் செத்தால் போதுமென்ற ஆசையே எஞ்சிநிற்கின்றது. ஆனால் பேய்களுக்குச் சாவில்லாது போயிற்று. எவரெவர் கஷ்டங்களெல்லாம் முடிகின்ற சுடுகாடும் எங்களுக்கு இல்லாதபடி செய்துவைத்தாய். சாகத்தான் இயலவில்லை என்றால், கீழவர்களான நாங் கள் முன்னாள் செய்தபாவத்தால் பிரம்மன் எங்கள் வயிற்றில் பசியைவைத்தான். எங்களுக்காக நாங்கள் வாழ்வதற்கில்லை. பசிக்கே உரியவராகிவிட்டோம். பத ரென நாங்கள் காற்றடித்தவிடம் பறக்கின்றோம். பசி யால்வருந்தி எங்கள் நாக்கிலேயே பாதியும் உதடுகளின் பாதியும் தின்றுவிட்டோம். இனி எங்கட்கிருப்பது அரை உதடே, அரை நாக்கே. அடியேங்களைக் கடைக் கண் அளிக்காயோ. எங்கள் மூக்கிற்கு அருகே கிணநாற் றந் தோன்றுகின்றது. உதடுகள் துடிக்கின்றன. வாயை ஈக்கள்வந்து மொய்க்கின்றன. இவை நற்சகுன மென்று நினைப்பதால் சிறிது பொறுத்திருக்கின்றோம். அல்லாக்கால் இப்பொழுதே சாவோம்.]

"கபி."




A MOMENTOUS BOOK

**ANCIENT JAFFNA**

BY

**Mudaliar C. RASANAYAGAM**

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

**FOREWORD**

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam, MADRAS.**

சுகாமிர்தம்.

வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கிளார்க்குமார் போன்ற மூளைவேலை செய்கின்றவர் களும் பிற நோய்களால் வருத்தப்படுபவர்களும் ரஸாயன ஔஷதங்களைச் சாப்பிடத்தேவையில்லை. மிகவும் இன்றியமையாத ஔஷதம் இது. பல மூலிகைகளைக்கொண்டும், அயம், காந்தம் இவை களைக்கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1-புட்டி 48-வேளை மருந்து ரூபா 3 0 0

கீழ்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Bhishakwara,

**A. KANAKARATNAM** A. M. A. C.

*Late Hony. Medical Officer & Anatomy Assistant,*

*Govt. School of Indian Medicine.*

**Ayurvedalayam,**

*1/24 Arunachala Naick St., Chintadripet, Madras.*

ஆநந்த குணபோதினி

மூன்றும் வருடம்

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவந்ததில்லை. இது சிறந்த வழியில் நடத்தப்படு கிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநு பவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக் கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ் வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்தி ரிகை. 5000 சந்தாதாரர்கள்.

வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4.

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, சென்னை.

9-ம் பதிப்பு! 9-ம் பதிப்பு!!

வெளி வந்துவிட்டது

ஆங்கில ஆசான்



தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங் களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற் றுக்கொடுத்ததும், முதன் முதல் வெளிவந்ததும் ஏராளமான நற்சாட் சிப் பத்திரங்கள் பெற்றதும் இது வே. எமது இப்படத்தில் காட்டி யுள்ள லேடி டிரேட் மார்க் இருக் கிறதாவென்று கவனித்துப் புத்த கம் வாங்குங்கள்.

800-பக்கம்

முழு காலிகோ பயிண்டு

விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலைத் தெரு, சென்னை.

## கம்பராமாயணம்

## பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பின் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

## ஏமாங்கதத்

## திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

# KAMBAN'S KOSALA

or

## A Poet's Plea for Culture

### by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

### With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.




# வர்த்தமானம்

**கல்கத்தா காங்கிரஸ் தலைவர்:**—லாலா லஜபத் ராயைத் தேர்ந்துகொள்ளும்படி 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது. அவரைத் தேர்ந்து நியமித்தால் பஞ்சாபியர் காங்கிரஸ் தலைவராக ஒருவரும் அனேக காலமாக அமையவில்லை என்பது நீங்கிவிடும்.

***

**விவசாய விருத்தி:**—விவசாயக் கமிஷன் அங்கத்தினருள் ஒருவராயிருந்த பானக்குமுடி ராஜா தான் பெற்றுக் கொண்ட சம்பளம்இருபதினாயிரம் ரூபாயையும் விவசாய விருத்திக்கான ஒருதுறையில் செலவிடும்படி, அரசாங்கத்தாருக்குக் கொடுத்திருக்கிறார்.

***

**லண்டனில் இந்திய பாங்கு வேண்டும்:**—லண்டன் இந்திய வியாபார சங்கத்தின் முதல் வருஷாந்த கூட்டத்தில் K. P. மேதா என்பவர் லண்டனில் ஒரு இந்திய பாங்கு அவசியம் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும் அதனால் எவ்வளவோ நன்மைகள் விளையும் என்றும் சொன்னார்.

***

**யுத்த நிறுத்தம்:**—ஐக்கிய நாட்டு அரசாங்கத்தைச் சேர்ந்த கெல்லொக் என்பவர் திரும்பவும் இந்த விஷயமாய்ப் பதினாலு அரசாங்கத்தாருக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கான ஒரு உடன்படிக்கையின் நகலை அனுப்பியிருக்கிறார். இது எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படுமாயின் அதன்மேல் இதைப் பிரிசுரிப்பார்கள்.

***

**பர்தோலி வரிகொடா இயக்கம்:** — இதைப்பற்றிப் பம்பாய்க் கவர்னருக்கும் இந்திய வர்த்தகருடைய பிரதிநிதிகளுக்கும் இடையில் ஓர் நீடித்த சம்பாஷணை நடந்தது. இதன்முடிவு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இதன் காரணமாக இந்த இயக்கம் சமாதானமாக ஒருமுடிவுக்கு வரலாமென்று எண்ண இடமிருக்கிறது.

***

**இலங்கைச் சர்வகலாசாலை:**—இலங்கைச் சர்வகலாசாலை ஸ்தாபனம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை யோசித்து முடிவு செய்வதற்காக இலங்கையில் நியமிக்கப்படவிருக்கும் கமிஷனுக்குத் தலைவராக ஒக்ஸ்வேட் ஹேறபேட் கல்லூரி தலைமை ஆசிரியர் ஸர் வால்டர் றிட்டெல் என்பவரை நியமித்திருக்கிறார்கள். இவர் ஜுலை மாதம் இலங்கைக்கு வருவார்.

***

**பம்பாய் நெசவு ஆலைகள் வேலை நிறுத்தத்தைப்** பற்றித் தொழிலாளர் பிரதிநிதிகளும் சொந்தக் காரர்களும் கலந்து சமாதானம் பேசியது மறுபடியும் ஒரு முடிவுக்கும் வராமல் வித்தியாசங்கள் ஏற்பட்டுவிட்டன. சொந்தக்காரர் வேலையாட்களுக்குச் சம்பளம் உயர்த்துவதாய் ஒப்புக் கொண்டதைச் சரிவர நிறைவேற்றவில்லை என்பது தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் அபிப்பிராயம். இருக்கிற நிலைமையைப் பார்த்தால் சீக்கிரம் ஒழுங்கு ஏற்படும் போலத் தெரியவில்லை.

***

**பள்ளிக்கூடங்களில் சமயக் கல்வி:**—பம்பாய்ச் சர்வகலாசாலையார் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மார்க் சம்பந்தமான கல்வி புகட்டுவதற்கு ஏற்ற வழிவகைகளை யோசிப்பதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதைத் தவிர மூன்று மாதத்துக் கொருமுறை மார்க் விஷயமாய் சர்வ கலாசாலையில் செய்யப்பட்ட ஆராய்ச்சி, உபந்நியாசங்கள் எழுதப்பட்ட புஸ்தகங்களைப் பற்றிய ஒரு பத்திரிகை பிரசுரஞ் செய்வதற்காக வருஷா வருஷம் 10000 ரூபா செலவுத் திட்டம் செய்யப்பட்டு அதை நடத்துவதற்கு ஒரு போர்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

***

**வைசராய் ஆப் இந்தியா:**— என்னும் ஒரு கப்பல் செப்டெம்பர் மாதம் P. S. O. கம்பனியாரால் செய்து முடிவாகும். இந்தக் கப்பலில் கடற் பிரயாணத்தில் இதற்குமுன் இல்லாத வசதி அனேகம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். முதலாம் இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளுக்கெல்லாம் தனி அறைகள் செய்திருக்கப் பட்டிருக்கின்றன. 415 முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கும் 258 இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளுக்கும் இடம் உண்டு. இதைத்தவிர பொதுக்கூட்ட அறைகளும் மேடைகளும் நீந்திக் குளிப்பதற்கு ஒருதடமும் இன்னும் அனேக வசதிகளும் உண்டு. இக்கப்பலின் முதற்பிரயாணம் அடுத்த மார்ச்சுமாதம் 28-ம்தேதி ஆரம்பமாகி லண்டனிலிருந்து பம்பாய்க்கு வரும்.

***

**விலைமிகுந்த இரத்தினக்கல்:**—இரத்தினபுரியிலே டக்றர் மெல். அற்றிக்கலை என்பவர்க்குச் சொந்தமான ஓர் இரத்தினச் சுரங்கத்திலே மிக ஏற்றமான விலைமதிப்புடைய இரத்தினக்கல் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அது பெரிதும் நட்சத்திர வடிவும், நீலவர்ணமுமுடைய ஓர் பெருங்கல். வெட்டி மெருகிட்டுப் பக்குவப்படுத்திய போது அதன் நிறை 35 வெள்ளி ரூபாயின் எடைக்குச் சரியாயிருந்தது. இலங்கை வர்த்தகர் இலட்சக்கணக்காய் அதற்கு விலைமதித்தனர். இலங்கையிலே போதிய விலைக்கு அதை வாங்கத்தக்கவர் நேர்படவில்லை. அதனால் அதன்சொந்தக்காரராகிய பிறக்தர் அதனைப் பிரான்சிலுள்ள தமது ஏசண்டுகளுக்கு அனுப்பிவைத்தார். அங்கே அது பாரிஸ்நகரிற் காட்சிக்கு வைக்கப்பட்ட போது அதனைக் கண்ணுற்ற அமீர் அரசர் அதில் ஆசை வைத்து அதை வாங்க விலை பேசினர். விலைசரிப்படவில்லை.

***

சென்ற சனிக்கிழமை, துறைமுகத்தில் வேலை செய்து கொண்டிருந்த வீரன் என்னும் கூலியாள் ஒருவன் ஒரு துப்பாக்கிக் குண்டு பட்டுச் சுழன்று விழுந்தான். அவனை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சிகிச்சை செய்தார்கள். முடிவில் மறுநாள் இறந்து போய்விட்டான். இந்தக் கூலிக்குக் குண்டு பட்ட நேரத்தில் சற்று தூரத்தி லிருந்த தன் வீட்டில் துறைமுக உதவி மெக்கானிக்கல் எஞ்சினியர் குவைற் என்பவன் காக்கைகளின் தொந்தரவு பொறுக்க மாட்டாமல் துப்பாக்கியில் குண்டு போட்டுக் காகங்களைச் சுட்டுக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது. அந்தக் குண்டுகளில் ஒன்றே இந்தக் கூலியையும் தாக்கியிருக்க வேண்டுமென்று ஏற்பட்டது. இந்தக் கூலியாள் முதல் முதல் துறைமுகத்தில் வேலைக்கு அன்று காலமேதான் வந்தானாம். அதற்குமுன் வண்டி இழுத்துச் சீவனம் செய்து வந்தவன்.

189009

***

**ஸ்ரீ மீனாட்சி சர்வகலாசாலை:**—ஸர். அண்ணாமலைச் செட்டியார் சிதம்பரத்தில் ஸ்தாபித்திருக்கும் கல்லூரியைச் சர்வகலாசாலை யாக்குவதற்காக இருபது லட்சம் ரூபாய் தானமளித்து அதற்குவேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கத்தாருடன் செய்திருக்கிறார். சீக்கிரத்தில் இதைபற்றிச் சட்டமேற்படுமென்று தெரிகிறது.

இது மீனாட்சி சர்வகலாசாலை என்று பெயர் பெறும். இதில் ஆயிரம் மாணவர் வாசிப்பதற்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். மாணவர்கள் தமிழ்நாட்டினராய்த் தானிருக்கவேண்டு மென்றில்லை, எவரும் சேரலாம். கலைகளும் சாஸ்திரங்களும் கீழ்நாட்டுக் கல்வியும் அங்குப் போதிக்கப் படும்.

சர்வகலாசாலைச் செலவுக்காக நாற்பது லட்சம் ரூபாய் மூலதனமாக ஏற்படுத்தப்படும். இதிற் பாதித்தொகை அரசாங்கத்தார் கொடுக்க விருக்கிறார்கள். சர்வகலாசாலைக் கட்டிடங்களுக்குப் பதினெட்டு லட்சம் செலவாகும். வருஷவாரிச் செலவு ஐந்து லட்சம். இதற்கு மாணவர் சம்பளம், வட்டி அரசாங்கத்தார் நன்கொடை முதலிய வருமானம் போதும். சர்வகலாசாலைக்காக இருநூறு ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார்கள்.

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

## T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

## Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "**KALANILAYAM**"

**11, Vellala Street, Purasawalkum, Madras.**



# Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(8)

## TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

## V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)